மார்கழி
DECEMBER 1986

கமநலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமநலம்

மலர் : 13 ★ மார்கழி 1986 ★ இதழ் : 4

பிரதம ஆசிரியர் :

திரு. ரி. பி. சுபசிங்க
(பணிப்பாளர்)

ஆசிரியர்கள் ;

க. தில்லைநாதன்
சோ. ராமேஸ்வரன்

ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் :

திரு. கே. ஏ. எஸ். தயானந்த
திரு. குணரத்ன ராமநாயக
திரு. எம். ஜி. எம். ரஸாக்
திரு. ரி. எ. தர்மரத்ன
திருமதி. தமரா காரியவாசம்
செல்வி. ஷாமினி தர்மலிங்கம்
திரு. எஸ். பீ. கே. கபில பண்டார
திரு. ஆர். எம். ரத்நாயக
திரு. எஸ். எம். கே. பீ. நந்தரத்ன
திரு. தயானந்த சந்திரசிறி
திருமதி. அசோகா சேபால

பொருளடக்கம்

பக்கம்

1. விதைகள்
2. இலங்கையில் மூல விதை உற்பத்தி நடவடிக்கைகள்
5. விதைத் தர நிர்ணயம்
9. விதைகளைச் சேமிப்பதற்கு சில உபாயங்கள்
10. பயிர் வளர்ச்சிக்கு சிறந்த விதைகள் அவசியம்
12. வெங்காய விதை உற்பத்தி
13. விதை தரத்தில் சூழலின் தாக்கம்
15. விதை சந்தைப்படுத்தல்
16. அவரை இனங்களை சேமித்து வைக்கும் முறை
18. உயர் விளைச்சலைப் பெற வழிகாட்டி
20. மட்டக்களப்பு மாவட்டத்தின் நெற்செய்கை: காலநிலையும் நீர்ப்பாசனமும்
26. பாடசாலை அதிபர்களுக்கு
27. 'கமநலம்' சந்தாதாரர்களுக்கு

விலை: (தனிப்பிரதி) ரூ. 3.00
ஆண்டுச் சந்தா ரூ. 10.00

கமக்காரர்களின் மத்தியில் தன்னம்பிக்கையையும் மன உறுதியையும் ஏற்படுத்தி, அவர்கள் கிராமிய நிறுவனங்களின் நடவடிக்கைகளில் பூரண பங்கெடுத்து அவற்றுடன் ஏற்கனவே உள்ள தொடர்பினை மேலும் வலுப்படுத்தி நிரந்தரமானதொன்றாக்கிக் கொள்ள இச்சஞ்சிகை உதவும்.

அச்சிட்டு வெளியிடுவோர் :
கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்
114, விஜேராம மாவத்தை,
கொழும்பு-7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைகள்

சுமார் ஒன்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் நோக்கத்துடன் பூர்வீக குடிகள் சார்கோஸ் மலைச் சாரலில் தானிய விதைகளை விதைத்தனர்.

பூர்வீக எகிப்தியர்கள் அடுத்து வரும் போகங்களின் போது விதைக்கும் பொருட்டு விதைகளை அரசாங்கத்தின் மேற்பார்வையின் கீழ் களஞ்சியப்படுத்தினர்.

பயிர் உற்பத்திக்கு சுத்தமான விதையின் அனுகூலங்களை பூர்வீக ரோமானியர்கள் அங்கீகரித்தனர்.

முதலாவது ஒழுங்குபடுத்தப்பட்ட விதை வர்த்தகம் 17ம் ஆண்டின் இறுதியிலும், 18ம் ஆண்டின் ஆரம்பத்திலும் ஜேர்மனி, பிரான்ஸ், பெரிய பிரித்தானியா ஆகிய நாடுகளில் ஆரம்பிக்கப்பட்டது.

முதலாவது விதை பரிசோதனை நிலையம் சுமார் 110 ஆண்டுகளுக்கு முன் ஜேர்மனியில் தாபிக்கப்பட்டது.

இது முதல் விதை தொழில் நுட்பத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. எனினும், அதிகளவு அபிவிருத்தியடைந்த கமத்தொழிலைக் கொண்டுள்ள உலகின் கைத்தொழில் மய நாடுகளுக்கே விதை கைத் தொழில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இன்று அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளின் முக்கிய பிரச்சினை என்னவெனில் விவசாய உற்பத்தியை அதிகரிப்பது அல்ல. கமத் தொழிலில் தங்கியுள்ளவர்களின் தொகையை குறைப்பதுடன் அதே நேரம் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் வருமானங்களையும் அதிகரிப்பதேயாகும். இந்நிலைமைகளின் கீழ் புதிய தொழில் நுட்பத்தை லாபகரமாக்கவும், உற்பத்தித் திறனை உயர்த்தவும் சிறந்த தரத்தைக் கொண்ட விதை தேவைப்படும்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உற்பத்தியை அதிகரிப்பதே முக்கியமானதாகும். சனத்தொகை வளர்ச்சிக்கு ஏற்பவும், உணவுத் தேவையின் கிராக்கிக்கு ஏற்பவும் வருடாந்தம் நான்கு சதவீதத்தினால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். எனினும், கடந்த சில வருடங்களாக பெரும்பாலான அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உற்பத்தி வீழ்ச்சி அடைந்தே வருகின்றது.

1970ம் ஆண்டில் உணவு விவசாய தாபனம் 73 அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விதை நிலைமை குறித்து ஆராய்ச்சி ஒன்றை நடத்தியது. 90 சதவீதமான நாடுகள் தமது விதை உற்பத்தியையும், அதன் விநியோக முறைகளையும் அபிவிருத்தி செய்ய வேண்டும் அல்லது வலிமைப்படுத்த வேண்டும் என்பதை மேற்படி தாபனம் கண்டறிந்தது.

ஏனைய உள்ளீடுகளுடன் ஒப்பிடும்போது விதை ஒருவகையில் வித்தியாசப்படுகிறது. ஏனெனில் விதை ஒரு உயிருள்ள பொருளாகும். விதையின் தரம் குன்றினால் உற்பத்தியே வீழ்ச்சி அடையும். அதனை உரிய காலத்தில், அதன் தன்மை மாறாமல் பாவித்தாலே உற்பத்தி உயர்வு அடையும்.

கமத்தொழில் முறைகள் நவீனமயபடுத்தப்படும் இக்கால கட்டத்தில் விதை இனங்களையும் திருத்தியமைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே உற்பத்தியை அதிகரித்தல், கமத்தொழிலை நவீனமயப்படுத்தல் ஆகியவை பெருமளவு விதையிலேயே தங்கியுள்ளது.

இலங்கையும் ஓர் அபிவிருத்தி அடைந்து வரும் நாடாக விளங்குவதால் மேற்படி உண்மைகள் இலங்கைக்கும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை. இவ்விதழில் விதையை மையமாக வைத்து கட்டுரைகள் தீட்டப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் மூல விதை உற்பத்தி நடவடிக்கைகள்

விவசாய திணைக்களத்தின் விதைகள் பிரிவே இந்நாட்டின் முக்கிய விதை உற்பத்தித் தாபனமாகும். சகல பயிர்களினதும் சகல மூல விதைகளும் இப் பிரிவைச் சேர்ந்த 35 விதை உற்பத்திப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனினும், பெரும்பாலான உறுதிப்படுத்தப்பட்ட விதைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட விதை உற்பத்தியாளர்கள் மூலமே உற்பத்தி செய்யப் படுகின்றன. இவர்கள் விசேடமாக நெல், உப உணவுப் பயிர்கள், மரக்கறி வகைகள் (போஞ்சி, தக்காளி), கிழங்கு ஆகிய இன விதைகளை உற்பத்தி செய்கின்றனர்.

விதைகள் பிரிவு 14 பிராந்திய விதை பதனிடல் பிரிவுகளினூடாக செயற்படுகின்றது. விதைத் தொழிற்சாலைகள் 14 விவசாய பணிப்பாளர்களின் (விதை) கட்டுப் பாட்டின் கீழ் இயங்குகின்றன.

இங்குள்ள 35 அரசாங்க பண்ணைகளின் மொத்த பரப்பளவு 4250 ஹெக்டார்களாகும். நெல் 1500 ஹெக்டார்கள், மரக்கறி 100 ஹெக்டார்கள், உப உணவுப் பயிர்கள் 300 ஹெக்டார்கள், கிழங்கு 100 ஹெக்டார்கள், மரப் பயிர்கள், பழங்கள் 400 ஹெக்டார்கள் என்ற பரப்பளவில் இவை விளைவிக்கப்படுகின்றன. எஞ்சிய பரப்பளவில் கட்டிடங்கள், வீதிகள், குளங்கள், தேக்கங்கள், புல் வெளிகள், மீள் காடமைப்பு பகுதிகள் ஆகியன அடங்குகின்றன.

நோக்கங்கள்

மூல விதை, பயிரிடுவதற்கான பயிர்கள் ஆகியவற்றுக்கு விதைகள் பிரிவே பொறுப் பாக விளங்குகிறது. இதன் நோக்கங்கள், பணிகள், தேசிய முன்னுரிமைகள் வருமாறு--

* மூல, உறுதிப்படுத்தப்பட்ட விதைகளினதும் உற்பத்தி, பதப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், விநியோகம், சந்தைப் படுத்தல்;

* விலைகளை சமச் சீராக வைத்திருப்பதற்கும், உற்பத்தித் திறன் மட்டத்தைப் பராமரிப்பதற்குமான தேவைக்கு மிஞ்சிய கையிருப்பினை உருவாக்குவதற்கு கிழங்குகள் மற்றும் மேலைநாட்டு மரக்கறி விதைகளை இறக்குமதி செய்தலும், விநியோகித்தலும்;

* அரசாங்க சார்பற்ற துறையில் விதைக் கைத் தொழிலை அபிவிருத்தி செய்வ

எம். டி. சமரசிங்க
விவசாயப் பிரதிப் பணிப்பாளர் (விதை)
விவசாயத் திணைக்களம்.

தற்காக தொழில் நுட்ப உதவியையும், ஆதரவையும் அளித்தல்;

* திணைக்கள அலுவலர்கள், கமக்காரர்கள் ஏனைய தொடர்பான முகவர் தாபன அலுவலர்கள் ஆகியோருக்கு விதை உற்பத்தி, பதனிடல், களஞ்சியப்படுத்தல், சந்தைப்படுத்தல் ஆகியன சம்பந்தப்பட்ட சகல அம்சங்களிலும் அவசியமான பயிற்சி வசதிகளையும், தகவலையும் வழங்குதல்;

* புதிய பயிர்கள், புதிய இனங்கள், பயிரிடல் முறைகள் ஆகியவற்றில் பரிசோதிப்பதனை மேற்கொள்ளுதல்;

* 25 நிருவாக மாவட்டங்களின் விதை, பயிர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உதவி விவசாய பணிப்பாளர் தலைமையிலான 14 பிராந்தியங்களில் விதை உற்பத்தி, பதனிடல், களஞ்சியப்படுத்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைப்படுத்தல் பிரிவுகளை நடைமுறைப் படுத்தல்.

விதை உற்பத்தியும் விநியோகமும்

நெல்

இந்நாட்டின் மொத்த விதைத் தேவையில் 10 சதவீதத்தையே மேற்படி பிரிவு பூர்த்தி செய்ய வேண்டும் என்ற போதிலும் இப்பிரிவு சுமார் 12 - 14 சதவீதத்தை பூர்த்தி செய்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள நான்கு பிராந்தியப் பிரிவுகள் இயங்காததினால் மூன்றில் ஒரு பங்கு விதைத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள விதை பற்றுக் குறையை சமப்படுத்த ஏனைய பகுதிகளில் உற்பத்தியை அதிகரிக்க சகல முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. வருடந்தோறும் சுமார் 5,50,000 புசல் விதை நெல் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது.

உப உணவுப் பயிர்கள்

பெரும்பாலும் உப உணவுப் பயிர்களின் மூல விதைகள் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. எஞ்சிய விதைகள் ஒப்பந்த உற்பத்தித் திட்டத்தின் ஊடாகப் பெறப்படுகின்றது. இந் நாட்டில் நிலவும் சீதோஷ்ண நிலையின் காரணமாகவும், ஒவ்வொரு பருவத்தின் போதும் விதைக்கான கிராக்கி ஏறி இறங்குவதன் காரணமாகவும் பெருமளவு பயிர் விதைகள் பொதுமக்களின் பாவனைக்கு மாற்றப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவ்வாறான ஒரு இழப்பினை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் விதைகள் பெரும்போகத்தில் இருந்து சிறுபோகம் வரை அல்லது சிறு போகத்தில் இருந்து பெரும் போகம் வரை மட்டுமே வழங்கப்படும். அத்துடன் ஒவ்வொரு பருவத்தின் போதும் விதைத் தேவைக்கென 50 சதவீத விதையையே தேவைக்கு மிஞ்சிய கையிருப்பாக வைத்திருக்க வேண்டும்.

மரக்கறி விதைகள்

1984ம் ஆண்டு முதல் தனியார் துறையே வெளிநாட்டு ரக மரக்கறி விதைகளை இறக்குமதி செய்கின்றது. தற்போது மேற்படி பிரிவு கிராக்கிக்கு ஏற்றவகையில்

சிறந்த ரக விதை சிறந்த பலனைத் தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூர் மரக்கறி விதைகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது. எனினும், பண்ணைகளில் போதிய நிலங்கள் இல்லாத காரணத்தினாலும், சில இனங்களை உற்பத்தி செய்ய முடியாத காரணத்தினாலும் சில இன விதைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. இந் நிலையைத் தவிர்ப்பதற்காக ஒரு பருவத்திற்குத் தேவையான விதையைப் பெறும் பொருட்டு தேவைக்கு மிஞ்சிய கையிருப்பினை வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்னும் 3 அல்லது 4 பருவங்களில் இப்பிரிவு சகல இனங்களினதும் தேவைக்கு மிஞ்சிய கையிருப்பினை வைத்திருக்கும். அதுவரை விரிவாக்க பிரிவினால் ஆகக் கூடுதல் அளவு விதையினை வழங்க சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்கு விதை

தற்போது அரசாங்க பண்ணைகள் மூலமாகவும், ஒப்பந்த உற்பத்தி மூலமாகவும் பெறப்படும் தொகை வருடமொன்றுக்கு 2,200 மெட்ரிக் தொன்களாகும். இதே வேளை 2,000 மெட்ரிக் தொன் விதை இறக்குமதி செய்யப்படுகின்றது. எனவே, விவசாயிகளுக்கு வழங்குவதற்கென விரிவாக்கப் பிரிவுக்கு 4,200 மெட்ரிக் தொன் விதை உருளைக் கிழங்கு ஒதுக்கப்பட்டுள்ளது. விதை உருளைக் கிழங்கு சுய நிறைவு உற்பத்தி திட்டத்திற்கு ஒப்ப 1987/88 பெரும் போகத்தின் போது விரிவாக்கப் பிரிவு 3,000 தொன் விதை உருளைக் கிழங்கையே வழங்கக் கூடியதாக இருக்கும். இத்தொகை அரசாங்கப் பண்ணைகளில் 250 ஏக்கர்களில் விளைவிக்கப்படும் விதைகளின் மூலமும், ஒப்பந்த உற்பத்தியாளர்களின் கீழ்வரும் 250 ஏக்கர்களில் விளைவிக்கப்படும் விதைகளின் மூலமுமே சமப்படுத்தப்படும். இறக்குமதி செய்யப்படும் விதை உருளைக் கிழங்கு பண்ணையில் நடுவதற்கேயாகும்.

மேற்படி பிரிவு 12 பயிர் விநியோக நாற்று மேடைகளைப் பராமரிக்கின்றது. இவற்றின் மொத்த உற்பத்தி விரிவாக்கப் பிரிவுக்கு விநியோகிக்கப்படுகின்றது. வருடமொன்றுக்கு இந்த நாற்று மேடைகள் 40,000 கன்றுகளையும், ஒரு லட்சம் விதைகளையும் வழங்குகின்றது. 1987/88 பெரும் போகத்தில் இருந்து இத்தொகையை இருமடங்காக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(கட்டுரையாளர் எழுதிய நீண்ட கட்டுரையொன்றின் சாராம்சம்)

விதையின் பெறுமானம்

விதையொன்றின் பெறுமானம் பின்வரும் குணதிசயங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(அ) உயர் விளைச்சல் திறன்.

(ஆ) திருந்திய பயிர்ச்செய்கை முறைகளுக்கு தாக்குப்பிடிக்கும் தன்மை.

(இ) உற்பத்திகளின் உயர் தரம்.

(ஈ) நோய்கள், பூச்சிகளுக்கு தாக்குபிடிக்கும் தன்மை.

(உ) எதிர் சூழல் காரணிகளுக்கு (பனி, வரட்சி) தாக்குப்பிடிக்கும் தன்மை.

(ஊ) இயந்திரவாக்க பயிர்ச்செய்கை அறுவடை முறைகளுக்குப் பொருந்தும் தன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைத்தரா நிர்ணயம்

விதைத்தர நிர்ணயத் திட்டம் என்பது தெளிவான பிறப்புரிமையியலையும், தரத்தையும் உடைய பயிர் இனங்களை விவசாயிக்கு கிடைக்கச் செய்வதாகும்.

இலங்கை விதைத்தரா நிர்ணய சேவை அதன் வெளிக்கள பணியை 1979/80 பெரும்போகத்தில் நெல்விதையின் ஒருங்கான தர நிர்ணயத்துடன் ஆரம்பித்தது. 1983/84 பெரும்போகத்திலிருந்து மற்றைய வயற்பயிர்களான கௌபீ, பயறு, சோயா அவரை, நிலக்கடலை ஆகியவற்றின் தரத்தை நிர்ணயிக்கும் திட்டமும் டச்சு அரசாங்கத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. கண்ணொருவையிலுள்ள விதைதர நிர்ணய சேவைத் தலைமைக் காரியாலயம் இலங்கை முழுவதற்குமான பரிசோதனைச் சட்ட திட்டங்களையும் ஒழுங்குமுறைகளையும் வழங்குகிறது. பரிசோதனைகள் 15 பிராந்தியப் பரிசோதனை நிலையங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் பிராந்திய நிலையங்கள் அதிகளவு விதை உற்பத்தி செய்யப்படும் இடங்களில் அமைத்துள்ளன. இந்நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் வருமாறு:—

1. பெல்விகாரை
2. ஹிங்குராக் கொடை
3. பொலன்நறுவை
4. கந்தளாய்
5. மகா இலுப்பள்ளம
6. அலுத்தறம
7. மல்வத்தை
8. நிக்வரட்டிய
9. பட்டா- அற்கு
10. அம்பேபுஸ்ஸ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. முருங்கன்
12. பரந்தன்
13. நுவரெலியா
14. குண்டசாலை
15. கரடியன் ஆறு

அரசாங்க விதைப் பண்ணைகளும் விதைப்பதப்படுத்தல் இயந்திரங்களும் இவ் விடங்களில் அமைந்துள்ளன.

விதைத் தரநிர்ணயத்தில் விதைத்தூய் மையே முக்கிய குறிக்கோளாக இருந்த போதிலும் மற்றைய விடயங்களான பௌதீகத்தூய்மை, சிறந்த தோற்றம், குறைவான களைவிதைகளும், நோயற்ற விதைகளும், உயர்ந்த முளைக்கும் திறன் ஆகிய வற்றிலும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

சிறந்த பயிர் இனங்கள் உற்பத்தி செய்யப்பட்டு அவை அவற்றின் உண்மையான நிலையில் விவசாயிகளுக்கு கிடைக்கக் கூடியதாய் இருந்தால் தான் விதை உற்பத்தி செய்வோரின் பணி உணரப்படும். விதைத்தர நிர்ணய கருதுகோள் சந்ததித் தொகுதிகளைக் கொண்டுள்ளது. இங்கு சிறந்த பயிர் இனத்தின் பரம்பரை தொடர்ச்சியான உற்பத்தி மூலம் பரிபாலிக் கப்படும். ஒவ்வொரு சந்ததியும் வெவ்வேறு வர்ணச் சீட்டுகளினுல் இனம் குறிக்கப்பட் டிருக்கும்.

இச்சீட்டுகளில் பயிர், இனம், குவியலின் இலக்கம், அடைக்கப்பட்ட திகதி, போகம், அதிகுறைந்த முளைக்கும் திறன், அளவு ஆகிய அம்சங்கள் குறிக்கப்பட்டிருக்கும்.

விதைக்குவியலின் பரம்பரையை குவியலின் இலக்கத்தைக் கொண்டு தேடிக்கண்டு பிடிக்கலாம். சீட்டுகளின் மேற்பக்கப் பாதி பையின் வெளியே இணைக்கப்பட்டிருக்கும். மற்றைய பாதி உட்பக்கத்தில் வைத்து அடைக்கப்பட்டிருக்கும்.

விதைத் தரநிர்ணயத்தின் சந்ததித் திட்டம்

(அ) உற்பத்தியாளரின் விதை இலட்சணங்கள்

1. அரசாங்க தாவர இனப் பெருக்க நிலையங்களில் தாவர உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப் படுகிறது.
2. சிறிய அளவுகளிலேயே கிடைக்கும்.
3. இளஞ்சிவப்பு வரியிடப்பட்ட வெள்ளை அடையாளச்சீட்டு தொங்கவிடப்பட்டிருக்கும்.
4. அரசாங்கப் பண்ணைகளுக்கு அடிப்படை விதையை உற்பத்தி செய்வதற்காக வழங்கப்படும்.
5. இயந்திரங்களால் பதப்படுத்தப் படுவதில்லை.

(ஆ) அடிப்படை விதை இலட்சணங்கள்

1. சில தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.
2. குறித்த அளவுகளிலேயே கிடைக்கும்.
3. முதலாவது முறையாக பெருக்கப்பட்ட உற்பத்தியாளரின் விதையாகும்.
4. வெள்ளைநிறச் சீட்டால் அடையாளமிடப்பட்டிருக்கும்.
5. இயந்திரத்தால் பதப்படுத்தப் படும்.

(இ) பதிவுசெய்யப்பட்ட விதை இலட்சணங்கள்

1. அரசாங்க விதைப் பண்ணைகளாலும், சில தெரிவுசெய்யப்பட்ட விதை உற்பத்தியாளர்களாலும் உற்பத்தி செய்யப்படும்.
2. இது அடிப்படை விதையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் விதையாகும்.
3. மெல்லிய பச்சைநிறச் சீட்டால் அடையாளமிடப்பட்டிருக்கும்.
4. உறுதிப்படுத்தப்பட்ட விதையை உற்பத்தி செய்வதற்காக விதை உற்பத்தியாளர்களுக்கு வழங்கப் படும்.
5. இயந்திரத்தால் பதப்படுத்தப் படும்.

(ஈ) உறுதிப்படுத்தப்பட்ட விதை 1ம்சந்ததி

1. தொடர்பு விதை உற்பத்தி யாளர்களால் உற்பத்தி செய்யப் படும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இது பதிவுசெய்யப்பட்ட விதையிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது.

3. அதிக அளவில் கிடைக்கிறது.

4. மெல்லிய நீலநிறச்சீட்டால் அடையாளமிடப்பட்டிருக்கும்.

5. விரிவாக்கல் பகுதியினரால் பயிர் உற்பத்தி செய்வதற்காக விவசாயிகளுக்கு விற்கப்படும்.

6. இயந்திரத்தால் பதப்படுத்தப்படும்.

(உ) வர்த்தக விதை

1. விதைத் தட்டுப்பாடு ஏற்படும்போது, விவசாயத் திணைக்களத்தின் வேண்டுகோளின் பேரில் விதை தரநிர்ணய சேவை வர்த்தக விதைக்குவியல்களை அடையாளமிட்டு பைகளில் அடைக்கும்.

2. விதை, தர நிர்ணய சேவையினால் மேற்பார்வை செய்யப்படாத, அல்லது ஆரம்பம் அறியப்படாத விதைகள், அல்லது ஆரம்பத்தைத் தேடிக்கண்டு பிடிக்கக்கூடியதான விதைகள் அடையாளமிடப்பட்டு வர்த்தக விதையாக அடைக்கப்படலாம்.

3. இனத்தூய்மையும், உண்மைத் தன்மையும் அறியப்படாத போதும் ஆய்வுகூடத் தரங்கள் உறுதிப்படுத்தப்பட்ட விதையை ஒத்ததாய் இருக்கும்.

4. மஞ்சள் நிறச் சீட்டால் அடையாளம் இடப்பட்டிருக்கும்.

5. இயந்திரத்தால் பதப்படுத்தப்படும்.

விதைதர நிர்ணயத்தில் பின்பற்றப்படும் படிகளாவன :-

விதைப்பண்ணைகளை பதிவுசெய்தல், விதை உற்பத்தி வயல்களைப் பரிசோதனை செய்தல், விதைக்குவியலை இனம்காணுதல், அடையாளமிடுதல், விதை மாதிரி எடுத்தல், ஆய்வுகூடத்தில் பரிசோதித்தல், பின்கட்டுப்பாடுகள். இந்நாட்டின் விதைத்தர நிர்ணயம் தற்பொழுது ஒரு தன்னிச்சையான தொழிற்பாடாக உள்ளதென்பதை விளங்கிக்கொள்வது அவசியமாகும், எனினும் விதைத் தரநிர்ணய சேவை உரிய முறைப்படி வளர்க்கப்பட்ட பயிர்களின் விதைகளுக்கே அடையாளச்சீட்டுக்களை வழங்கும்.

விதக்குவியல்களின் தரத்தை நிர்ணயிக்கும்போது எடுக்கப்படும் படிமுறைகள் கீழே விளக்கப்பட்டுள்ளன :

(1) விதை உற்பத்திப் பண்ணைகளிடமிருந்து அந்தப் பிராந்தியத்திற்குரிய விதை வளர்ப்போரின் பட்டியல் கிடைத்த பின்பு தொடர்புக் கமக்காரரினதும், அரசாங்க பண்ணையினதும் வயல்களை தரநிர்ணயத்திற்காக பதிவுசெய்தல் உபயோகிக்கப்பட்ட விதையின் ஆரம்பத்தைப் பற்றிய தகவல்கள் (உ+ம்; விதைப்பின் அடையாளச்சீட்டு) விதை தரநிர்ணய சேவை வெளிக்கள உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

(2) விதை, தர நிர்ணய வெளிக்கள உத்தியோகத்தர்களால் எல்லா விதை உற்பத்தி வயல்களிலும் ஆரம்ப பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

(3) எல்லா விதை உற்பத்தி வயல்களிலும் கடைசி வயற் பரிசோதனை விதைதர நிர்ணய சேவை வெளிக்கள உத்தியோகத்தர்களாலேயே மேற்கொள்ளப்படும். குறிப்பாக வேறு விதைகள் கலந்துள்ளதா என்பதற்கு முக்கியத்துவம் அளித்து விதைத்தர நிர்ணய சேவையினால் விதிக்கப்பட்டுள்ள பரிசோதனைத் தரங்களுக்கேற்ப விதை வயல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் அல்லது நிராகரிக்கப்படும்.

(4) கொள்வனவு செய்யப்படு முன் தொடர்பு கமக்காரரின் விதைக் குவியல்களிலிருந்து மாதிரி பெறப்படும். சாக்குகளில் அடையாளச் சீட்டு இணைக்கப்பட்டு மாதிரி பெறப்பட்ட பின் அவை மூடப்படும்.

(5) அரசாங்கப் பண்ணைகளிலிருந்து பதப்படுத்திய விதைக் குவியலிலிருந்து பெறப்பட்ட விதை மாதிரிகள் மகாஇலுப்பள்ளம அல்லது பேராதனையிலுள்ள விதை ஆய்வு கூடங்களுக்கு விதைப் பரிசோதனைக்காக அனுப்பப்படும்.

(6) சர்வதேச விதைப்பரிசோதனைச் சபையினால் ஏற்படுத்தப்பட்ட விதிகளுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமைய பிறப்புரிமையியல், பௌதீகத் தூய்மைக்கான ஆய்வுகூடப் பரிசோதனைகள், முளைத்தல், ஈரலிப்புப் பரிசோதனைகள் ஆகியன மேற்கொள்ளப்படும்.

(7) கடைசி வயற் பரிசோதனை அறிக்கைகளையும், ஆய்வு கூட முடிவுகள் போன்றவற்றையும் சரிபார்த்த பின் விதை தர நிர்ணய சேவையினால் விதைக் குவியல் வெளியிடப்படும்.

(8) நிராகரிக்கப்படும் எல்லா விதை. தர நிர்ணய சேவை வெளி அடையாளச் சீட்டுக்களும், அடைப்புகளும் விதை தர, நிர்ணய சேவை வெளிக்கள உத்தியோகத்தர்களால் நீக்கப்படும்.

அலுவலக விதைக் குவியல் அனுமதிக்கப்பட்டு வெளியிடப்பட முன் மற்றய விதைக் குவியல்கள் வழங்கப்படுவது அதிகார பூர்வமாக அனுமதிக்கப்படவில்லை.

பின் கட்டுப்பாடு

விதை மாதிரிகளின் குறிப்பிட்ட விதம் பரிசோதனைப் பாத்திகளில் அவ்வினங்களின் சிறந்த சந்ததிகளின் அருகே வளர்க்கப்பட்டு வாங்குபவர்களுக்கு கிடைத்த விதையின் தரம் வயலில் அதன் திறமையின் அடிப்படையில் கடைசியாக மதிப்பிடப்படும்.

விதை நெல்லின் எல்லாச் சந்ததிகளும் அருகருகே வளர்க்கப்பட்டு அவற்றின் பிறப்புரிமையியல் தூய்மை மதிப்பிடப்படும். இப் பரிசோதனைகளில் பிரச்சினையுள்ள விதைக் குவியல்கள் இனம் காணப்பட்டு அவை விதை உற்பத்தியாளர்களுக்கும் வயல் மேற் பார்வையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டு அவற்றின் தரத்தை உயர்த்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒவ்வொரு போகத்துக்குமுரிய தரமான மாதிரியை அடிப்படையாகக் கொண்டு, விதை மாதிரிகளின் பொதுவான தோற்றமும், நிறமும் பார்வையால் தரப்படுத்தப்படும். தரங்கள் நல்லது, மத்திமம், குறைவு என்று குறிப்பிடப்படும். குறைவான திறம் விதைக் குவியல் நிராகரிக்கப்படுவதற்கு ஓர் ஏதுவாக அமையும்.

முடிவுரை:

1. விதை உற்பத்தியில் அடங்கியுள்ள முறைகள், அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், அவற்றின் எல்லைகள் போன்றவற்றைக் காட்டக்கூடிய உத்தியோக பூர்வமான தொரு விதைக் கொள்கை (விதைச் சட்டம்) மிக விரைவில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

2. எந்தவொரு விதைத் தர நிர்ணய சேவையும் முற்றாக சுயாதீனமாகத் தொழிற்படும் போதுதான் நடு நிலையாகச் செயலாற்ற முடியும். இந்தச் சுதந்திரம் தொழில் நுட்ப ரீதியில் மட்டுமன்றி நிதித் துறையிலும் இருக்க வேண்டும். எனவே விதைத் தர நிர்ணய சேவை அதன் சேவைகளுக்கான கட்டணத்தை தனிப்பட்ட விதை உற்பத்தியாளர்களிடமிருந்தும், அரசாங்க பண்ணைகளிடமிருதுந்ம், மற்றைய நிறுவனங்களிடமிருந்தும் வசூலித்துக் கொள்ள வேண்டும்.

(வளம்: குருஷி)

பாட்டாளி எங்கள் கூட்டாளி

நெற்றி வியர்வை நிலத்திற் சிந்த
நிலத்தில் உழைக்கும் மனிதன்
கற்றரை மீது உயர்ந்தவனுவான்
இவனே எங்கள் பாட்டாளி!

உடலை வளைத்து உயர்வைக் காணும்
உத்தமமான மனுப் பிறவி
கடல்போல் உள்ளம் கொண்டவனுவான்
கருணை மிகுந்த கூட்டாளி!

உலகம் உய்ய உயிர்கள் வாழ
உழவுத் தொழிலைச் செயுந்தோழன்
திலகம் போலே நாட்டிற்தோன்றும்
திடமாய் உழைக்கும் தொழிலாளி!

பஞ்சம் பறக்கப் பாதைவகுக்கும்
பசுமை தன்னைப் பாருக்களிக்கும்
நெஞ்சம் கொண்ட தொழிலாளி - எம்
நினைவில் நிறைந்த விவசாயி!

படித்தவர் சில்லோர் பழித்தாற்கூடப்
பற்றேயுண்டு உழவுத் தொழிலில்
அடிக்கடி செலுத்தும் அறிவாளி
அகிலம் போற்றும் கூட்டாளி!

எம். எஸார்,
ஸாஹிறக் கல்லூரி,
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைகளைச் சேமிப்பதற்கு சில உபாயங்கள்

விதை ஓரு உயிருள்ள பொருளாகும். விதை செய்யப்படுவதல்ல; வயலில் உற்பத்தி செய்யப்படுகிறது.



களஞ்சியத்தினுள் வைக்குமுன் விதைக்கு தூபமளித்தல் சிறந்தது. சேமிக்குமிடத்திலும், அதைச் சுற்றியும் தகுந்த பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுதல் அவசிய மாகும்.

களஞ்சிய அறையை ஒவ்வொரு வருடமும் நன்கு துப்பரவு செய்து அதிலுள்ள வெடிப்புக்களைப் பழுது பார்க்க வேண்டும்.

எஞ்சி நின்று தாக்கும் இயல்புள்ள பூச்சி கொல்லிகளைச் சுவரிலும், நிலத்திலும் தெளிக்கவும்.

புதிய சாக்குகளையும், பழைய சாக்கும் (உபயோகப்படுத்தும் முன் சுத்த மாக்கி) தூபமிட வேண்டும்.

அதிக ஈரப்பதனும், அதிக வெப்ப நிலையும் விதையின் முளைத்தலை விரைவுடுத்தலுடன் பூச்சித் தாக்கத்தையும், பூரண வளர்ச்சியைப் ஊக்குவிக்கும்.

உலர்ந்த விதைகளையே சேமிப்பதுடன் அவற்றை உலர்வாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

12 சதவீத ஈரப்பதன் உள்ள விதை 13 சதவீத ஈரப்பதன் உள்ள விதைகளை விட இரு மடங்கு காலத்திற்கு உயிர்த்திருக்கும். 14 சத வீத ஈரப்பதன் உள்ள விதைகளைவிட நான்கு மடங்கு காலத்திற்கு உயிர்த்திருக்கும்.

இதே போன்று 70 பாகை சென்டிகிரேட்டில் சேமிக்கப்பட்ட விதைகளை 80 பாகை சென்டி கிரேட்டில் சேமிக்கப்பட்ட விதைகளை விட இருமடங்கு காலத்திற்கும், 90 பாகை சென்டிகிரேட்டில் சேமிக்கப் பட்ட விதைகளைவிட நான்கு மடங்கு காலத்திற்கும் வைத்திருக்கலாம்.

அனேக விதை இனங்களை உயர்ந்த வெப்ப நிலைகளில் கூட வாழ்த்தகைவை இழக்காது வைத்திருக்கலாம். ஆனால், அவற்றை மிகவும் உயர்வாக வைத்திருக்க வேண்டும்.

தாவரத்தின் வளர்ச்சிக் காலத்தின் போது ஏற்படும் நீர் பற்றுக்குறை, போசணைக் குறைபாடு, வாடல் நோய்கள், பூச்சித் தாக்கம் போன்ற பாதகமான சூழ்நிலைகளினால் விதை உச்சமான வாழ்த்தகைவையும், வீரியத்தையும் பெறுது இருக்கலாம். ஆரோக்கியமான தாவரங்களிலிருந்து சரியான நிலைமைகளில் வளர்க்கப்பட்டு சரியான முறையில் கையாளப்பட்ட விதைகளை அதிக காலம் சேமித்து வைக்கலாம்.

சேமிப்பு தாவரத்தில் உடற்றொழிலியல் முதிர்ச்சி அடைந்ததிலிருந்து ஆரம்பித்து விவசாயின் வயலில்பு.ளைக்கும் வரை தொடர்ந்து செல்லும். இக்காலத்திற் கிடையில் இது பல இடங்களில் சேமிக்கப் படுகின்றது. தாவரத்தில், வயலில், சூட

கலாநிதி வை. ஆர். மோத்த

டிக்கும், இடத்தில், விதை பதப்படுத்தும் இடத்தில், விதை களஞ்சியத்தில் கொண்டு செல்லப்படுகையில். பங்கீடு செய்யப்படும் நிலையத்தில், விவசாயின் வீட்டில் எனப் பல இடங்களில் சேமிக்கப்படலாம்.

சரியான பருவத்தில் அறுவடை செய்ய வேண்டும். உடனடியாக சூடடிக்க வேண்டும். விரைவாகப் பதப்படுத்திக் கவனமாகச் சேமிக்க வேண்டும். வேகமாகக் கொண்டு செல்ல வேண்டும். உபயோகிக்கும் முன் சரியான முறையில் சேமிக்கும்படி விவசாயிகளுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.

மனிதரைப் போலவே விதைக்கும் வயதாகும். வயது போவதையும், முளைத் திறன் இழப்பதையும் ஒருவராலும் கட்டுப் படுத்த முடியாது. ஆனால், சரியான சேமிப்பு முறைகளால் வயதினால் ஏற்படும் முதிர்ச்சியின் வேகத்தைக் குறைக்கலாம்.

அறுவடை செய்து சேமித்து வைத்தால் தான் விதைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர் வளர்ச்சிக்கு
சிறந்த விதைகள் அவசியம்

விளைவின் அளவு விதையின் தன்மையில் தங்கியிருக்கின்றது. விதையில் தவறுகள் ஏற்பட்டு விட்டால் அவற்றைப் பின் நிவர்த்தி செய்ய முடியாது. மானிட, மிருக அபிவிருத்திக்குச் சந்ததிச் சிறப்பு எவ்வளவு அவசியமோ அதேபோல் பயிர் வளர்ச்சிக்குச் சிறந்த விதைகள் அத்தியாவசியம். ஆகையால் தகுந்த விதைகளைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். 'விளையும் பயிரை முளையில் தெரியும்' என்பது முதுமொழி. முளையின் தராதரம் விதையைப் பொறுத்ததே.

நல்ல விளைவுக்குரிய விதைகளைத் தேர்ந்தெடுக்க ஆறு நல்லியல்புகள் கவனிக்கப்பட வேண்டும்.

அவை:
1. நல்ல வடிவமும் பருமனும்.
2. மண்ணுக்கும், பருவத்துக்கும் ஏற்றவை.
3. நடுத்தரப் பிராயச் செடிகளின் விதை.
4. விதைகளின் தேர்ச்சிக்குரிய பழம்.
5. சேமிப்பு முறைகள்.
6. பரம்பரை இயல்பறிந்து விதைகளைக் கொள்ளல்.

1. நல்ல வடிவமும் பருமனும்:

திடமுள்ள பரம்பரையில் பிறக்கும் குழந்தைகள் வலுவுள்ளவர்களாயிருப்பர். அவர்கள் ஆரோக்கியசாலிகளாவுமிருப்பர். இது ஓர் இயற்கைச் சிறப்பு. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது முதுமொழி. அழகான தோற்றம் சிறப்பான ஆரோக்கியத்துக்கு, அமைப்புக்கு அறிகுறி. ஆகையால் நல்ல வடிவமும், பருமனுமுள்ள விதைகளைத் தேர்ந்தெடுத்து பயிர் வளர்ச்சியை முன்னேற்ற வேண்டும்.

2. மண்ணுக்கும் பருவத்துக்கும் ஏற்றவை

இயற்கைப் பொருட்களின் தராதரம் பெரும்பாலும் சூழ்நிலையில் தங்கியிருக்கிறது. சொகுசான சூழ்நிலையில் உற்பத்தியாகி வளர்ந்த பயிர் கஷ்டமான நிலையில் உருப்படாது. கோடைகாலப் பயிர் குளிர் காலத்தில் ஓங்கி வளராது. ஆகையால் மண், பருவ சூழ்நிலைகளை ஆராய்ந்து அவற்றுக்கு ஏற்ற விதைகளைச் சேகரித்து விதைக்க வேண்டும். 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்பது பழமொழி. ஆகையால் ஆடி மாதங்களில் பயிரிடுதலைத் தொடங்குவது நன்று. பரம்பரை பரம்பரையாய்ச் சில ஊர்களில் தனிப்பட்ட பயிர்கள் செய்யப்பட்டுச் சிறப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைந்திருக்கின்றன. யாழ்ப்பாண மாம் பழம், முருங்கைக்காய் இவ்விதத்தில் பேர் பெற்றவை. ஆகையால் பிரதேச வாரியாய் மண்ணுக்கும் பருவத்துக்கும் ஏற்ற பயிர் களைத் தேர்ந்தெடுத்துப் பெருக்கல் நற்பயன் அளிக்கும். விலங்கின வளர்ச்சியிலும் இவ் விதி பெரும்பாலும் பயனளிக்கிறது. உழவர் கள் கவனிக்க வேண்டிய ஓர் சிறப்பு அம்சம் இதுவே.

3. நடுத்தரப் பிராயச் செடிகளின் விதை:

இளம் செடிகளினதும் கிழச் செடிகளி னதும் விதைப் பயிர்ச் செய்கையில் பலன் அளிக்கா. நடுத்தரப் பராயத்தில் பயிரின் சக்தி உச்ச நிலையில் இருக்கும் காலங்களில் பழம் ஆய்ந்து விதை சேகரிக்க வேண்டும்.

4. விதைகளின் தேர்ச்சிக்குரிய பழங்கள்;

நன்ருய்க் கனிந்து பழுக்காத பழங்களின் விதைகளும், முற்றிப் பழுத்து அழுகின பழங்களின் விதைகளும் பயிர்ச் செய்கையில் பயன் அளிக்க மாட்டா. செடிகளில் பழுக் காமல் பறித்துப் பழுத்த பழ விதைகளும் பெரும் பயன்தர மாட்டா. தோட்டத்தில் உள்ள சிறந்த பழங்களை அவதானித்து பக்குவமாய்ப் பாதுகாத்து பழுக்க வைத்து விதை சேகரிக்க வேண்டும்.

5. சேமிப்பு முறைகள்:

நல்ல விதைகளும் சேமிப்பு முறைகளால் பாதிக்கப்படலாம். ஈரமும் குளிர் காற்றும், பூச்சிகளும், நோய்க் கிருமிகளும் இருக்கும் இடங்களில் சேமிக்கப்பட்ட விதைகள் விதைப்புக்குப் பயன்பட மாட்டா. முளைத் தாலும் விருத்தியடைய மாட்டா. விதை களைக் காற்று நுழையாப் பெட்டிகளிலும், உறைகளிலும் சாம்பல், கந்தகத் தூள்களு டன் கலந்து சேமித்து வைக்க வேண்டும். அவரை, முருங்கை போன்ற பயிர்களை விதை யைக் காயிலிருந்து அகருறது பாதுகாக்க வேண்டும். விதைகளை நன்கு காய வைத்து, பின் சேமித்து வைக்க வேண்டும். விதை முளைப்பதற்கு காற்று வெப்பம், ஈரம் வேண் டும். இவை சேமிப்புக் காலங்களில் விதை யுடன் சேர்ந்தால் முளை எழும்பி விதை பழுதுபடும்.

6. பரம்பரை இயல்பறிந்து விதைகளைக் கொள்ளல்:

''புலிக்குப் பிறந்தது பூனையாகாது'' என்பது கிராமவாசிகளின் பொது அறிவு. மிருக, பயிர் வளர்ச்சிக்கும் பரம்பரை மிக வும் முக்கியமானது. ஒரு தோட்டத்தில் பல செடிகளிலிருந்தாலும் அவற்றில் சில செடிகளே செழித்து வளர்கின்றன. இவை இயற்கை. நற்குணங்களாலும், சூழ்நிலை வாய்ப்பாலும் ஏற்படும் சிறப்புகள். இவற்றை வேளாழ மக்கள் நுணுக்கமாய் அவதானித்து, ஆராய்ந்து பயிர்த் தேர்ச் சிக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு செடி விரைவில் பூத்துக் காய்த் தால் அச்செடி நல்ல செடி என்பது அறிகுறி. அவ்வாறன செடிகளில் அதிகம் காய்க்கும் செடி இன்னும் திறம்பட்டது. பெரும்பா லும் செடிகள் மூன்று முறை பூத்துக் காய்க் கும். இவற்றில் இரண்டாவது முறை காய்த்து பழுத்த பழங்களின் விதைகளே விருத்திக்குச் சிறந்தவை. இவற்றைச் சேக ரித்துப் பயிர்களைப் பெருக்க வேண்டும்.

ஒரு பாத்திர நீரில் இட்டவுடன் சில விதைகள் நீரின் அடிக்குச் செல்லும். சில மிதக்கும். மிதக்கும் விதை சக்தியற்றவை. தாழும் விதைகள் சக்தியுள்ளவை. விதைப் புக்கு முதல் நாள் விதைகளை ஒரு துணியில் முடிந்து முடிப்பை நீரில் ஊறப்போட்டு மறுநாள் முடிப்பைப் பிரித்துப் பார்த்தால் விதை முளைவிட்டிருப்பதைக் காணலாம். பெரும்பாலும் முளைத்திருந்தால் நல்ல விதைகள் என்பது அறிகுறி.

கமக்காரர் தமக்கு அடுத்த வருடத்தில் தேவைப்படும் விதைகளை இவ் வருடத் திலேயே தேர்ந்தெடுத்துச் சேமித்து வைக்க வேண்டும். வட்டாரத்திலுள்ள மற்ற விவ சாயிகளை அணுகி நல் விதைகள் தேடிப் பெற்று நல்ல பயிர் வளர்ச்சிக்கு வழி காண வேண்டும்.

(நன்றி: 'காய்கறிப் பயிர் முறை')

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்காய விதை உற்பத்தி

இலங்கையில் நடுகைப் பொருளாக முக்கியமாக வெங்காயக் குமிழ்கள் பாவிக்கப்பட்ட போதிலும் சில இனங்கள் பூக்களையும், உயிர் வாழக்கூடிய விதைகளையும் உண்டாக்கக் கூடிய பிறப்புரிமை திறனை உடையவை. வனுத்தவில்லு ஆராய்ச்சி நிலையத்திலும், கற்பிட்டியிலும் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப ஆய்வுகள் ஊக்கமளிக்கக் கூடிய முடிவுகளைத் தந்துள்ளன.

பூக்கள் விதைகளின் உற்பத்தியில் கால நிலைக் காரணிகளே முக்கிய பங்கை வகித்த போதிலும் விசேடமான இன வகையைத் தெரிந்து கொள்வது தான் முக்கியமானதாகும். அத்தகைய ஒரு இனம் உள்நாட்டு ''மல்லூனு'' இனமாகும். இது வேதாளத்திலிருந்து (வேதாரணியம்) எடுக்கப்பட்ட ஒரு தெரிவாகும். வெங்காயச் செய்கையில் வெங்காயக் குமிழ்களுக்குப் பதிலாக விதைகளைப் பாவிப்பதால் உற்பத்திச் செலவில் 40 சத வீதத்தை சேமிக்க முடியும்.

இதைவிட நடுகைப் பொருளாக உண்மையான விதைகளை உபயோகிக்கும்போது ஏக்கரொன்றுக்கு 8-10 அந்தர் குமிழ்களையும் சேமிக்க முடியும். (800-1000 கிகி / ஹெக்- இது விதையளவாகும்). இது நுகர்விற்கு கிடைக்கும் வெங்காயத்தை அதிகரிப்பதுடன், சேமிப்புக் கஷ்டங்களையும் நிவர்த்தி செய்கிறது. நடுகைப் பொருளாக உண்மையான விதைகளைப் பாவிப்பதனுல் இத்தகைய நன்மைகள் எல்லாவற்றையும் விட மேலும் பல நன்மைகளும் உள்ளன.

1. சேமிப்பு கஷ்டங்களினுலும், நுகர்வோரினுல் ஏற்படும் உயர்ந்த கிராக்கியின் காரணமாகவும் நடுகைக் காலத்தில் விதைக் குமிழ்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதன் விளைவாக நடுகைப் பொருளின் விலை அதிகரிக்கிறது.

2. அதிக அளவான நடுகைப் பொருளைக் கொண்டு செல்வதற்கும் செலவு ஏற்படும். (10 அந்தர் / ஏக்கர் - 1000 கி. கி/ ஹெக்), இதுவும் பயிர்ச்செய்கைச் செலவுடன் சேர்க்கப்பட வேண்டும்.

3. நோய்கள், பீடைகள் பரவுவதைத் தடுப்பதற்கு எவ்வித பாதுகாப்பு முறைகளும் எடுக்கப்படுவதில்லை. நிமற்றோடுகள் நடுகைப் பொருட்கள் மூலம் பரவக்கூடிய அபாயம் உள்ளது. இது அதிகளவில் பொருளாதார இழப்பையேற்படுத்தும்.

வெங்காயக் குமிழ்களுக்குப் பதிலாக உண்மையான வெங்காய விதைகளைப் பாவிப்பது சிறந்தது என்பதை இக்கட்டுரை உறுதிப் படுத்துகிறது. வனுத்தவில்லு விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் 80/81 பெரும் போகத்தின்போது நடப்பட்ட 'மல்லூனு' 80 சத வீதப் பூக்களை உண்டாக்கியது. வெயிலில் காய்ந்த இந்தப் பூக்கள் பொலித்தீன் பைகளில் 10 மாதங்களுக்கு சேமித்து வைக்கப்பட்டு நடும் பொழுது விதைகள் பிரித்து எடுக்கப்பட்டு கற்பிட்டி விவசாய ஆராய்ச்சி நிலைய நாற்று மேடைகளில் விதைக்கப்பட்டபோது 90 சதவீதம் முளைத்தன. இந்த நாற்றுக்கள் நாற்று நடப்பட்டன. இவற்றிலிருந்து ஆரோக்கியமான குமிழ்கள் கிடைத்தன. இக்குமிழ்கள் பின்பு நடப்பட்டு பூக்கும் தன்மைகள் அவதானிக்கப்பட்டன.

அறை வெப்ப நிலையில் பூந்துணருடனும், பிரித்தும் வைக்கப்பட்ட விதைகளின் வாழ்தகைவு பரிசோதிக்கப்பட்டது. சேமித்து 3 மாதங்களின் பின் முளைத்தல் பரிசோதனைகள் செய்யப்பட்டன. இரண்டு வகையான சேமிப்பு முறைகளிலும் 90 சதவீத முளைத்தல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மற்றைய முக்கிய அவதானங்கள்

1. சிறு போகத்திலும், பெறும்போகத்திலும் நட்டு முறையே 30, 45 நாட்களால் பூக்கள் தோன்றின.

2. வெங்காயக் குமிழ்கள் ஏறக்குறைய 45 நாள் ஆரம்பகால உறங்கு நிலையை உடையவையாதலால் நடும்போது குமிழ்களின் வயதே பூக்கும் வயதைத் தீர்மானிக்கிறது.

3. பூக்கள் நன்கு முற்றியதும் அறுவடை செய்யப்பட்டு குளிர் நிலைச் சேமிப்பு எதுவுமின்றி விவசாயிகளின் சாதாரண உள்ளூர் நிலைமைகளிலேயே சேமித்து வைத்து விதையின் வாழ்தகைவைப் பரிபாலிக்கக்கூடியதாய் உள்ளது. விதைக்கும் வரை விதைகளைப் பூந்துணருடன் வைப்பதே சிறந்ததாகும்.

(வனுத்தவில்லு விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் விவசாய உத்தியோகத்தர் பீ. எச். டி. பெர்னுண்டோ எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதை தரத்தில் சூழலின் தாக்கம்

— திஸ்ஸ யட்டவர —
(ஆராய்ச்சி பயிற்சி உத்தியோகத்தர்)

கம உற்பத்தியைப் பெருக்குவதற்கு நீர், இரசாயன உரம், மற்றும் பூச்சி கொல்லி, களைகொல்லி போன்ற இரசாயனப் பொருட்களை விஞ்ஞான முறைப்படி பிரயோகிப்பதுடன், உயர் விளைச்சல் தன்மை கொண்ட புதிய விதை இனங்களையும் பயன்படுத்துவது அவசியமாகும். விதை இனங்களை உற்பத்திசெய்கையில் குறித்த பயிரின் வளர்ச்சிக்கால வட்டத்தைப்பற்றி நன்கு தெரிந்திருத்தல் வேண்டும். அதாவது, குறித்த பயிர் ஆண்டுக்கு ஒரு முறையா இரண்டு முறையா பூத்துக் காய்ப்பது, பூக்கள் கருக்கட்டும் விதம் (ஒரே பூவில் மகரந்தச் சேர்க்கையால் நடைபெறுவது, தனித்தனி ஆண், பெண் பூக்களின் மகரந்தச் சேர்க்கையால் நடைபெறுவது) கருக்கட்டலை ஏற்படுத்தும் ஏதுக்கள், பாலின வேறுபாடுகளின் செயற்பாடுகள், வெளிச்சம், காற்று, வெப்பம் போன்றவை பயிர்களில் ஏற்படுத்தும் தாக்கம் போன்றவற்றைப் பற்றி அறிந்திருத்தல் அவசியமாகும்.

விதைக்காக மாத்திரம் பயிர்செய்யப்படும்போது, அவை வளரும் சூழ் நிலையைப் பொறுத்து (வெளிச்சம், காற்று, வெப்பம் போன்றவற்றின் நிலைமை) விதையின் சிறப்புத் தன்மை எப்படி அமைகிறது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

விதைகளின் சிறப்புத்தன்மையை மேம்படுத்தும் சூழலைப்பொறுத்த இரண்டு காரணிகள் வெப்பமும், ஈரத்தன்மையுமே என அனுபவரீதியான கணிப்புகள், விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகள் ஆகியவற்றின் மூலம் தெளிவாகியுள்ளன. விஞ்ஞானிகள் கண்ட முடிவுகளின் படி, மண்ணின் ஈரத்தன்மையும், காற்றோட்டமும் விதைகளின் இரசாயன கட்டமைப்புக்குப் பெரிதும் உதவுகின்றன. மழை காலத்தில் வளிமண்டலத்தில் காற்றோட்டம் அதிகமாக இருப்பின் விதைகளில் நைதரசன் அளவு அதாவது புரதத்தின் அளவு குறைவாக இருப்பதுடன், அவற்றில் பொசுபரசு, கல்சியம், பொட்டாசியம், மக்னீசியம் ஆகியவற்றின் அளவு அதிகமாகவும் இருக்கும். இதே போன்ற சூழ்நிலையினால் விதைகளில் குளுக்கோஸ் சத்து அதிகமாகவும், 'சுக்ரோஸ்' சத்து குறைவாகவும் உற்பத்தியாகின்றன. இதன் காரணமாக விதைகளின் முளைப்பாற்றல் பாதிக்கப்படுகின்றது.

பூக்கும் காலத்தில் மழை பெய்தால் விதை உற்பத்தி வீழ்ச்சியடையும். ஏனெனில் பூக்களின் மகரந்தப்பொடி கழுவப்பட்டுப் போவதனால் கருக்கட்டுதல் பாதிக்கப்படுகிறது. இதேபோல வரட்சியும் பூக்களைப் பாதிப்பதனால் கருக்கட்டல் பாதிப்படைகிறது. இதன் காரணமாக விதைகள் அவற்றின் இயல்பான தன்மையைப் பெருதிருப்பதுடன், விதைகளின் எண்ணிக்கையும் குறையும். இது மட்டுமல்லாது, உரம் இட்ட பின்னர் வரட்சி நிலவினால் விதைகளின் நிறையும் குறைவாக இருப்பதைக் காணலாம்.

விதைகள் முற்றிவரும் வேளையில் வளிமண்டலத்தில் அதிக காற்றோட்டம் நிலவினால் விளைச்சல் குறைவதுடன், அப்பயிரின் குணவியல்பு காட்டும் தன்மையும் விதைகளில் குறைந்து காணப்படும். விதை முற்றும் காலத்தில் மழை இருந்தால், விதையினுள் செழுமை ஏற்படும். இதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக விதைகளின் காய்ந்த தன்மை நீங்கும்.

செழிப்பான மண்ணுக இருந்தும், பயிர் பூக்கும் போதும், காய்கள் முற்றும் போதும், நிலத்தின் ஈரலிப்பு தேவைக்கு மேற்பட்டதாக இருந்தால் அவை செடிகளிலிருந்து வெதும்பி விழக்கூடும். இதனுல் இத்தகைய செடிகளுக்குச் சூரிய வெளிச்சத்தினுல் கிடைக்கும் நன்மையும் கிட்டுவதில்லை. இதனுலேயே விதையின் கருவூலத்துக்கு வேண்டிய உணவுப் பதார்த்தம் செறியாது போகிறது. கூடுதல் ஈரலிப்பினுல் பாதிக்கப்படும் பயிர்கள் குறுகிய காலத்துக்கே நிலைக்க முடிகிறது. இத்தகைய பயிர்களில் விளையும் விதைகளில் மாச்சத்துக் குறைவாகக் காணப்படும். இவை காரணமாக நிறையில் குறைவான, முளைப்புச் சக்தி குறைந்த விதைகள் உருவாகும்.

எடுத்துக்காட்டாகச் சொன்னுல், நெற் பயிரில், கதிர் முற்றும் வேளையில் வெதும்பல் ஏற்பட்டால் விளைச்சலில் 6-8 சதவீதம் வீழ்ச்சி ஏற்படும். கதிர் வாட்டம் அதிகமாக இருப்பின் விளைச்சலில் 15-20 சதவீதம் பாதிப்பு ஏற்படும்.

வளிமண்டல காற்றேட்ட நிலைக்கு அடுத்ததாக வெப்பம் பயிர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் மற்றெரு காரணியாகும். சிறப்புத் தன்மைகள் பலவற்றைக் கொண்ட விதைகளை உற்பத்தி செய்வதற்கு இவ்விரு காரணிகளும் உன்னத நிலையில் இருத்தல் வேண்டும். காற்றேட்டம், வெப்டம் ஆகியன நல்ல நிலையில் இருப்பின், விதைகள் நன்கு முதிர்ச்சி பெறுவதுடன் புரதம், மாச்சத்து போன்வற்றின் செறிவும் அதிகரித்திருக்கும்.

விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளின்படி இரவில் அதிக வெப்பம் நிலவினுல் விதை நெல் துரிதமாக முற்றும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

சூரிய வெளிச்சம் குறைவாக இருப்பின் அது விதைகள் சிறப்புத் தன்மை பெறுதற்கு தடையாக இருக்கும். விதைகளில் தோன்றும் புரதம் குறையும். குறைவான சூரிய வெளிச்சம் பெறும் பகுதிகளில் விளையும் விதைகளில் மற்றைய பகுதிகளில் உள்ளவற்றிலும் பார்க்கக் கூடுதலான நைதரசன் காணப்படும். இதனுலேயே வெப்பமான பிரதேசங்களில் சிறப்புத்தன்மைகள் பல கொண்ட விதைகளை விளைவிக்க முடிகிறது.

இவைமட்டுமல்லாது நல்ல விதைகளை விளைவித்தற்கு அவற்றுக்கான மண் பௌதிக ரீதியிலும், இரசாயன ரீதியிலும் உன்னத நிலையில் இருத்தல் வேண்டும். சேதன உரம் அதிகமுள்ள மண்ணில் விளையும் விதைகளில் புரதம் அதிகம் காணப்படும். சாம்பல் அல்லது மஞ்சள் நிறம் படிந்த மண்ணில் இத்தன்மை குறைவாகவே இருக்கும்.

மழை காலத்தில் காற்றின் வெப்பமும் சுழற்சியும் அதிகமாவதுடன், ஆகாயம் முகில்களினுல் மூடப்பட்டிருப்பதன் காரணமாக பயிர்களின் வளர்ச்சிக்காலம் நீடிக்கும். ஆயினும் விளைச்சல் குறைந்தும், விதைகளின் சிறப்புத் தன்மை பாதிக்கப்பட்டும் காணப்படும். கோடை காலத்தில் ஈரலிப்புத் தன்மை குறைவதுடன் காற்றேட்டம் குறைந்திருக்கும். இந்நிலையில் பாசன நீரைப் பயன்படுத்தி பயிரை விளைவித்தால் வித்துக்களின் இயல்புகள் பாதிப்படையாது நன்னிலையில் இருக்கும்.

உயர்தர வித்துக்களைப் பெறும் நோக்குடன் விளைவிக்கப்படும் பயிர்கள் கோடை காலம் ஆரம்பிக்கும்போதே நாட்டப்படுகின்றன.

மேற்குறித்த சூழல் நிலைமைகளை அனுசரித்து விளைவிக்கப்படும் பயிர் வித்துக்கள் சிறந்தவைபாகவும், பல ஆண்டுகளுக்கும் கெடாதனவாகவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதை சந்தைப்படுத்தல்

விதைகள், உரம், கிருமிநாசினி, உள்ளீடுகள், இயந்திர வர்க்கம் ஆகியன உரிய நேரங்களில் கிடைக்கும் பட்சத்திலேயே கமக்காரர்கள் தமது கமச் செய்கையை சரிவரச் செய்யக் கூடியதாகவிருக்கும். அத்துடன் இவை நியாயமான விலைக்கும் கிடைக்க வேண்டும். இவற்றை கமக்காரர்களுக்கு வழங்குவதற்கு ஒழுங்கு செய்ய வேண்டிய பங்கு சந்தைப்படுத்தல் முகவர் தாபனங்களையே சார்ந்தது.

சந்தைப்படுத்தல் என்னும்போது உற்பத்தியில் இருந்து பாவனை வரையிலான சகல நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்றது. விதை சந்தைப் படுத்தலைப் பொறுத்த வரையில் சிறந்த, தரம்மிக்க விதைகளை உரிய நேரத்தில் கமக்காரர்களுக்கு வழங்குவது முக்கியமாகும்.

கமக்காரர்கள், பல நூற்றுண்டு காலமாக தமது விதைகளை அல்லது அயலவர்களின் விதைகளை உபயோகித்தனர். இந்த முறையினுல் அவர்களுக்கு விதைகள் உரிய நேரத்தில் கிடைத்தன. பணத்தை முதலீடு செய்ய வேண்டிய தேவை இருக்கவில்லை. ஆனுல், துரதிர்ஷ்டவசமாக விவசாய உற்பத்தி தேக்கம் அடையும் ஒரு நிலைதான் ஏற்பட்டது. திருந்திய, சிறந்த ரக விதைகளைப் பாவித்து விளைச்சலை அதிகரிக்காமையே இந்நிலைமை ஏற்பட்டதற்கான முக்கிய காரணமாகும். இதனை மாற்றியமைக்கும் முகமாக திருந்திய, சிறந்த ரக விதைகளை உற்பத்தி செய்து அவற்றினை கமக்காரர்களுக்கு வழங்கும் பல திட்டங்கள் தீட்டப்பட்டன.

விதைகளைக் கமக்காரர்களுக்கு வழங்குவதற்குப் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் என அறியப்பட்டுள்ளது:

1. அடிப்படை விதைகளை விதை வளர்ப்போருக்கு விநியோகித்தல் அல்லது விற்பனை செய்தல்.
2. விதை வளர்ப்போர்களிடமிருந்து விளைந்தவுடன் கிடைக்கும் விதைகளைச் சேகரித்தல்.
3. இவ் விதைகளைப் பெறுமதி மிக்க பயிர் உற்பத்தி உள்ளீடாக மாற்றியமைத்தல்.
4. களஞ்சியப்படுத்தல்.
5. விற்பனை செய்தல். (விலை நிர்ணயம் உட்பட)
6. குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப விதைகளைக் கமக்காரர்களுக்கு கிடைக்கச் செய்தல்.
7. பொருத்தமான இடத்தில் கமக்காரர்களுக்கு விதைகளை வழங்குதல்.
8. உற்பத்தியைத் திருத்தியமைப்பதற்கு விதை உற்பத்தியாளர்களுக்கும், கமக்காரர்களுக்கும் ஆலோசனை கூறுதல்.

விதைகளை சந்தைப்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் விவசாய, வர்த்தக அறிவை பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கமக்காரர்களின் தேவையை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பதையும் அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை இனங்களை சேமித்து வைக்கும் முறை

பாசிப்பயறு, சௌபீ போன்ற அவரை இனங்களை பயிர் செய்யும் விவசாயிகள் அவற்றைச் சேமிப்பதில் பொதுவாக பிரச்சினைகள் எதிர்நோக்குகின்றனர். அறுவடை முடிந்தவுடன் அவற்றை குறைந்த விலைக்கு விற்றுவிட்டு பின்பு அவற்றையே நடுகைக்குப், உண்பதற்குமாக கூடிய விலை கொடுத்து வாங்குகின்றனர். இதனால் நாடெங்கும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு விதைகளை விநியோகிக்கும் பொறுப்பை விவசாயத் திணைக்களம் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் அநேக விவசாயிகள் மரபு வழியாக விவசாயத்தை மேற்கொள்ளும் குடும்பங்களிலிருந்து வராதவர்களாக இருப்பதால் பயிர்ச் செய்கையுடன் தொடர்பான மரபு வழிமுறைகளை அறியாதவர்களாக உள்ளனர். பிந்திய பெரும் போகத்தில் அவரை இனங்களைப் பயிர் செய்யும் விவசாயிகள் சாவகச்சேரிப் பகுதியில் அவரை இனங்களைச் சேமிப்பதில் மரபு வழியாக மேற்கொள்ளும் முறையொன்று கீழே விபரிக்கப்பட்டுள்ளது:

தேவையான பொருட்கள்

(அ) மண் பானைகள் அல்லது கூடை. (பனை ஓலையால் செய்யப்பட்டது)

(ஆ) உலர்ந்த நுண்மணல் அல்லது உலர் சாம்பல்.

(இ) மரத்தாலான தாங்கிகள்.

(ஈ) மாட்டுச் சாணம்.

முறை

சேமிக்கப்பட வேண்டிய பொருளின் அளவிற்கு ஏற்ப பாத்திரகங்களைத் தெரிந்து கொள்ளவும். ஒரு புசலுக்குக் குறைந்த அளவெனின் மண் பானைகளில் சேமிக்கலாம். வெவ்வேறு அளவுடைய கூடைகளை யாழ்ப்பாணச் சந்தையிலோ அல்லது பனை அபிவிருத்திச் சபையிடமிருந்தோ வாங்கிக் கொள்ளலாம்.

பி. தாமோதரம்பிள்ளை

விவசாயி கூடையை உபயோகிக்க விரும்பினால் மாட்டுச் சாணத்தை தடிப்பான கரைசலாக கரைத்து கூடையின் உள் பக்கமும், வெளி பக்கமும் மெல்லிய படையாக பூசி வெயிலில் காயவிடுவதன் மூலம் சிறிய துவாரங்களை அடைத்துக் கொள்ளலாம். கூடையைத் தாங்கியின் மேல் வைக்க வேண்டும். பானைகளுக்கு சாணம்பூச வேண்டியதில்லை. பானைகள், நடுவதற்கு பாவிக்கப்படும் விதைகளைச் சிறிய அளவுகளில் சேமிப்பதற்கு மிகவும் பொருத்தமானவையாகும்.

பாத்திரங்களை உலர்ந்த, குளிரான இடத்தில் வைத்து நன்கு உலர்ந்த விதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை 6 அங்குல உயரமுடைய படைகளாக இடவும். ஒவ்வொரு படைக்குமிடையே உலர்ந்த நுண்ணிய மணலை அல்லது உலர்ந்த சாம்பலை இடவும். இது விதைகளுக்கிடையே உள்ள இடைவெளியை நிரப்பும். இவ்வாறு விதைப் பொருட்கள் அனைத்தையும் நிரப்பிய பின் மேலே ஒரு அங்குலத்திற்கு மண் அல்லது சாம்பலினால் நிரப்பவும். இம்முறை மூலம் விதைகளை எவ்வித சேதமுமின்றி ஒரு வருடம் வரை சேமித்து வைக்கலாம். மண்ணிலிருந்தோ, சாம்பலிருந்தோ விதைகளை அரிப்பதன் மூலம் இலகுவாகப் பிரித்தெடுக்க முடியும்.

நன்மைகள்

* விதைகள் இரசாயனங்களின் தொடுகைக்கு உட்படுவதில்லை.
* பீடைகள் பங்கசுக்களின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கப்படுகின்றன.
* கூடிய காலத்திற்கு சேமித்து வைக்கலாம்.
* விதைகள் வாழ்தகைவை இழக்க மாட்டா.
* பாத்திரங்களை உள்ளூரிலேயே பெற்றுக் கொள்ளலாம்.
* எந்தவொரு விவசாயியாலும் கைக்கொள்ளக்கூடியது.
* சந்தையில் கிடைக்காத காலங்களில் விவசாயி இவற்றை உயர் விலைக்கு விற்று உயர் லாபத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு

இம்முறை, பெரும்போகத்தின் பிற்பகுதியில் நெல்லை அறுவடை செய்தவுடன் நெல்வயலில் மானாவாரியாக ஏறக்குறைய நூறு ஹெக்டர்கள் வரை பயிர் செய்யும் சாவகச்சேரியில் உள்ள கல்வயல், இருவன் கிராம விவசாயிகளால் கையாளப்படுகிறது. இப்பகுதி விவசாயிகள் விதைப்பொருட்களைப் பாதுகாத்து வருவதால் விவசாயத் திணைக்களத்தில் புதிய சிறந்த இனங்கள் கிடைக்கும் போது மட்டுமே திணைக்களத்தை நாடுகின்றனர்.

★ ★ ★

களஞ்சிய காலம்

வெவ்வேறுபட்ட ஈரப்பதன் நிலைமைகளில் களஞ்சியப்படுத்தப்படும் அவரையின விதைகளின் களஞ்சிய காலம் வருமாறு :

ஈரப்பதன்	களஞ்சிய காலம்
11 - 13 சதவீதம்	6 மாதங்கள்
10 - 12 சதவீதம்	1 வருடம்
9 - 11 சதவீதம்	2 வருடங்கள்
8 - 10 சதவீதம்	4 வருடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் விளைச்சலைப் பெற வழிகாட்டி

உயர் விளைச்சலைத் தரும் பயிருக்கு சிறந்த தர விதையே காரணமெனக் கூறப்படுகிறது. விதைத் தர நிர்ணயம் என்றால் என்ன? அது எவ்வாறு இறுதி விளைச்சலுக்கு உதவுகிறது?

'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்பதே பழமொழி. மானிட வாழ்விலும் சிறந்த நிறைவான உணவை உண்டு வளரும் பிள்ளைகள் வலிமையான திடகாத்திரமான வர்களாக வளர்வதை அவதானித்திருக்கின்றோம். இதே முறையை செடிகளிலும் அவதானிக்கலாம். நல்ல தரத்தையுடைய விதைகள் திடகாத்திரமான செடிகளை உற்பத்தி செய்வதுடன், உயர் விளைச்சலையும் கொடுக்கும்.

ஆரம்ப தர நிர்ணயத்திற்கு முதற் கண் தேவையான அம்சங்கள் எவை? 1981 ஆம் ஆண்டில் இடுபொருள் பற்றிய சர்வதேச மகாநாடு இலங்கையில் நடைபெற்றது. உலகின் பல பாகங்களிலிருந்து வந்த விஞ்ஞானிகள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். சர்வதேச ஆணுபவங்களைக் கொண்டும் இலங்கையின் சொந்த அனுபவங்களைக் கொண்டும் சில முக்கிய அம்சங்கள் கவனிக்கப்படுகின்றன.

சிறந்த விதைத்தரம் பல அம்சங்களைக் கொண்டுள்ளது. அதாவது:-

(1) பாரிய, நன்கு அமைந்த உருண்டு திரண்ட விதைகள், சுருக்கங்கள், வெடிப்புகள், பிளவுகள் இல்லாதது.

(2) முளைவிடும் தன்மையை உறுதிப் படுத்த விதைகளை குளிர் நிலைமைகளில் களஞ்சியப்படுத்துதல். (குளிர் சாதனம் அல்லது குளிரூட்டிகள்)

(3) களஞ்சியப்படுத்தும் போது பூச்சித் தாக்கம். இதற்கு வர்த்தக ரீதியிலான பூச்சி நாசினித் தூள் உபயோகம் அவசியமாகிறது.

(4) இயந்திர சாதனங்களால் ஏற்படும் சேதம் விதைகளுக்கல்லாமை, கூடிய வெப்ப நிலையில் நன்கு காயவிட்ட பின் கடின நிலத்தில் டிராக்டர் மூலம் சூடு மிதித்தால் கண்ணுக்குப் புலனாகாத வெடிப்பு மூலவுருவிற் கூடாகத் தோன்றும். சில வேளை விதைகள் அடங்கிய பையை நிலத்தில் போடும் பொழுதும் இத்தகைய சேதம் ஏற்படுகிறது. வெப்ப, வரண்ட வலயத்தில் விதைகளை வெயிலில் மிகையாகக் காய வைத்தால் விதைகளின் ஈரப்பதன் 10 சதவீதமாகக் குறைகிறது. இதனால் இவ் விதைகளைக் கையாளும் போது இயந்திர சாதனங்களினால் சேதம் ஏற்பட ஏதுவாகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது.

(5) விதைகளுடன் கூடிய நோய் உயிர் பொருள் – இந்நிலை விதைகள் களஞ்

— சிசில் டி. தர்மசேன —
(சோயா அவரை நிபுணர்)

சியப்படுத்தும் போதும், முளைவிடும் போதும், ஆரம்ப வளர்ச்சியின் போதும் விதைகள் சேதமடைகிற தன்மைக்கு முக்கிய காரணியாக வுள்ளது. இத்தகைய உயிர்ப் பொருட்கள் கண்ணுக்குப் புலப்படாது. விதைகள வழமைபோல் தோற்மளிக்கும்.

(6) நடுகைக்குப் பின் – மண் கடின புரணியால் (HARD CRUST) மூடப்படல் கனத்த மழையால் விதைகள் கழுவப்படல், நடுகைக்குப் பின் இது ஏற்படுகிறது. கனத்த மழையும் அதனைத் தொடர்ந்து வரண்டு போவதால் மண் மேற் பரப்பில் கடின புரணி தோன்றுகிறது. இதனால் வித்து முளை விட்டு மேல் கிளம்ப முடியாது உள்ளது. அத்துடன் நடுகையின் பின் ஏறபடும் கனத்த மழை மேலாக விதைத்த விதைகளைக் கழுவிச் சென்று விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) ஆழ விதைத்தல் - ஆழத்தில் விதைப் பின் விதைகள் மடிந்து போகும்.

(8) தண்ணீர் இன்மை - நடுகை காலத்திலும், முளைவிடும் காலத்திலும் தண்ணீர் இல்லாவிடில் பாரதூரமான பிரச்சினை ஏற்படும்.

(9) கிருமியுட் புகுத்தியை சரிவர உபயோகிக்காது விட்டால் களுக்கட்டல் சிறப்பாக இடம் பெறுது.

(10) உரம் - சிபாரிசு செய்யப்பட்ட பிரகாரம் சிறந்த வளர்ச்சிக்கு உரப் பாவனை அவசியம்.

(11) உரிய முறையில் நிலத்தைப் பதனிடல் - விதை இலகுவாக முளைவிட்டு வேர்களும் இலகுவாக ஆழத்திற்கு ஓட முடியும்.

(12) சிறந்த மண் - நல்ல சேதனப் பொருளுடன் கூடிய ஈரலிப்புத் தன்மையுடைய மண் முக்கியமானது.

இவையாவும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விடயங்களாகும். இலங்கையைப் பொறுத்தவரை இவற்றில் பெரும்பாலான விதைத்தர முகாமைத்துவ பிரச்சினைகள் ஹெக்டருக்கு 1000 - 1500 கிலோகிராம் என்ற குறைந்த நிலையில் வைத்திருக்கின்றது.

இத்தகைய பிரச்சினைகளை அகற்றுவது சாத்தியமாகுமா? கீழே தரப்படும் வழிமுறைகளை ஓரளவு பின்பற்றினால் பல பிரச்சினைகளை கூடிய வரை கட்டுப்படுத்தலாம்.

* குறைந்த மழை வீழ்ச்சியும், சிறந்த சூரிய வெளிச்சமும் உள்ள சிறுபோக காலத்தில் நீர்ப்பாசனம் செய்து சிறந்த விதைகளைப் பெறலாம். இத்தகைய விதைகளில் நோயுள்ள உயிர் பொருள்கள் வெகு குறைவு. மழை காலத்தில் அல்லது மப்பும் மந்தாரமுமான காலத்தில் முதிர்ச்சியடையும் விதைகளில் உள்ளுக்குள் நோய் உயிர்ப் பொருள்கள் இருக்கலாம். இவ்வுயிர்ப் பொருட்கள் விதை முளைவிடும்பொழுது அல்லது வெளியரும்பி வரும்போது விதைகளை அழித்து விடுகின்றன. இதனால் வயல்களில் திட்டுத திட்டாக செடிகள் முளையாது இருப்பதைக் காணலாம். நடுகைக்கு ஒரு வார காலத்திற்கு முன் முளைவிடும் பரிசோதனையை மேற்கொள்ளவும். ஆங்காங்கே 100 விதைகளைத் தெரிவு செய்து ஈர மண்ணில் முளைக்கப் போடவும். ஒருவார காலத்தின் பின் திடகாத்திரமான அரும்புகளை எண்ணிப் பாருங்கள். 90 க்கும் மேற்பட்டது சிறந்தது.

* இயந்திர சேதத்தைத் தவிர்க்க கவனமாக அறுவடை செய்து சூடு மிதிக்க வேண்டும். விதைகளை சுத்திகரித்து தரம் சற்று குறைவான விதைகளைப் பொறுக்கி எடுக்கவும். காய்ந்த பிற்பாடு குளிர்ந்த நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் களஞ்சியப்படுத்த வேண்டும். களஞ்சியப்படுத்தும் இடம் சுத்தமாகவும், பூச்சிகள் இன்றியும் இருக்க வேண்டும்.

* நிலத்தை நன்கு பதனிடுக. மண் ஆழமாகவும், உயிர்ப் பொருள் நிறைந்ததாகவும் இருக்க வேண்டும். சிபார்சு செய்த உரத்தை உபயோகிக்கவும்.

* விதையை அதிக ஆழத்தில் அல்லாது ஆக மேற்பரபிலும் அல்லாது நட வேண்டும் (1'' - 1½''). மண் ஈரலிப்பாகவும் இருக்க வேண்டும். அவசியம் ஏற்படின் மண்ணுக்கு நீர்விட்டு ஈரலிப்பாக வைத்திருக்கவும். அவசியமேற்படின் நீர்ப்பாசனம் மூலம் மண்ணை ஈரலிப்பாக வைத்திருக்க வேண்டும்.

மேற் குறிப்பிட்ட முறைகள் கடைப்பிடிப்பின் பிறந்த ஒரே சீரான திடகாத்திர நாற்றுக்களை 10 தினங்களில் காணலாம். இத்தகைய நோயற்ற நிலை நல்ல முகாமைத்துவத்தினால் பெறப்படுகிறது. இதனால் உயர் விளைச்சல் கிடைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்டத்தின் நெற்செய்கை

காலநிலையும் நீர்ப்பாசனமும்



மட்டக்களப்பு மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு 631,936 ஏக்கர்களாகும். இதில் ஏறக்குறைய 28 சதவீதமான நிலம் விவசாயத்திற்குப் பயன்படுகிறது. இந்நிலத்தில் 75 சதவீதத்திற்மேல் நெற்செய்கைக்கு பயன்படுத்தப்படுகிறது. எனின், கிட்டத்தட்ட 1,33,000 ஏககர் காணி இந்த மாவட்டத்தில் நெற்செய்கைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. தென்னை, மரமுந்திரி, உபஉணவு வகைகள் முதலாய பிற பயிர்கள் அனைத்தும் எஞ்சிய நிலத்தில் பயிரிடப்படுகின்றன.

அட்டவணை ஒன்றில் இருந்து நெற்பயிர்ச் செய்கைக்கு ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பை பொறுத்தவரை இலங்கையில் உள்ள மாவட்டங்களில் மட்டக்களப்பு மூன்றும் இடத்தை வசிக்கிறது என்பதைக் கண்டு கொள்ளலாம். இனி இம்மாவட்டத்தின் குடிசனத்தைதொகையில் 80 சத வீதமானோர் விவசாயத்தை நம்பி வாழ்வோர் என்பதையும் கருத்திற் கொள்ளும்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் பொருளாதார அமைப்பிலும், சமூக இயல்பிலும் நெற்செய்கைக்கு உள்ள முக்கியத்துவம் புலப்படும்.

திருமதி என். பி. காசிநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பேராதனை பல்கலைக்கழகம்.

ஆனல், இலங்கையின் நெல் உற்பத்தி எனும் நோக்கில் பார்க்கும்போது இலங்யின் மொத்த நெற்பரப்பில் 7.8% மட்டக்களப்பில் செய்கை பண்ணப்பட்டபோதிலும், தேசிய நெல் உற்பத்தியில் 3.1% பங்களிப்பே இங்கிருந்து பெறப்படுகிறது. நெல் உற்பத்தியில் இம்மாவட்டம் ஆறும் இடத்தையே வகிக்கிறது. அம்பாறை. மாவட்டத்தின் நெற்பரப்பு மட்டக்களப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைவிட மிக அதிகம் என முடியாது. ஆனால், உற்பத்தி அங்கு இரண்டு மடங்காகும். பொலன்னறுவையில் நெற்பரப்பு குறைவாயிருந்த போதிலும் மட்டக்களப்பைப் போல் இரண்டுமடங்கு நெல் அங்கு உற்பத்தியாகிறது.

அட்டவணை: 1

பிரதான உலர்வலய மாவட்டங்கள் சிலவற்றின் நிலப்பரப்பும், உற்பத்தியும் 1983/84 பெரும்போகம்

மாவட்டங்கள்	தேசிய நெற் பரப்பில் மாவட்டங்களின் பங்கு (1%)	தேசிய நெல் உற்பத்தியில் மாவட்டங்களின் பங்கு (1%)
1. மன்னார்	2.4	2.9
2. அனுராதபுரம்	9.1	9.3
3. பொலனறுவை	5.5	7.5
4. திருகோணமலை	5.8	4.4
5. மட்டக்களப்பு	7.8	3.1
6. அம்பாறை	8.2	6.5
7. அம்பாந் தோட்டை	3.3	5.1

மேற்கூறிய ஒப்பீடுகள் இரண்டையும் நோக்குவோருக்குச் சில விடயங்கள் தெளிவாகும். மட்டக்களப்பு மாவட்டம் தனது சனத்தொகையில் பெரும்பாலானோரது கவனத்திற்கு நெற் செய்கையை நம்பியிருந்த போதிலும் நெற்செய்கையினால் இங்கு கிடைக்கக்கூடிய வருவாய் மிகக் குறைவாகவே காணப்படும். விவசாயம் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பலன் குறைவாகவே கிடைக்கும். பெருமளவிலான காணிகளில் நெற்செய்கையில் ஈடுபடும் நிலச் சொந்தக்காரர்களுக்குப் போதிய வருமானம் கிடைத்தாலும் சிறு அளவிலான காணித்துண்டுகளில் நெல் பயிரிடுவோர் உதாரணமாக அம்பாறை, பொலன்னறுவை மாவட்டங்களில் உள்ள சிறு விவசாயிகள் பெறுவது போன்ற பலனைப் பெறமாட்டார்கள். சுருங்கக் கூறின், விரல் விட்டெண்ணக்கூடிய பெரும் நிலச் சொந்தக்காரர்களைத் தவிர்த்தல், பொதுவாக மட்டக்களப்பு மாவட்ட விவசாயியின் வருமானம் மிகவும் ஒறுப்பான சீவனத்திற்கே போதியதாகும். மாவட்டத்தின் மிகக் குறைந்த சில பகுதிகளில் சில வளமான நெற் செய்கையிடங்களில் இருப்பினும் இவை புறனடையாகுமேயன்றி பொதுவான தாழ் நிலைச் சித்திரத்தை மாற்றப் போதியனவாகா. அட்டவணை இரண்டில் மட்டக்களப்பு மாவட்ட விளைச்சல் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடக்கூடிய வகையில் காட்டப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் இலங்கையில் நெற்செய்கைக்கு முக்கியமான ஒன்றாக யாவராலும் கருதப்பட்டு வந்த போதிலும் உற்பத்தி இவ்வளவு குறைவாக இருப்பதற்கான காரணம் வெளிப்படையானதே. இலங்கையின் உலர்வலயம் என அழைக்கப்படும் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டமும் அடங்கும். ஆண்டொன்றிற்கு எழுபத்தைந்து அங்குலத்திற்கு குறைவான மழை வீழ்ச்சியைப் பெறும் பகுதிகளே உலர் வலயம் என அழைக்கப்படுவன. தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு ஒவ்வொரு மாதமும் நான்கு அங்குலத் திற்குக் குறைவாய் மழை பெய்யும் பகுதிகள் எனவும் 'உலர்வலயம்' என்பதற்கு வரைவிலக்கணம் தரப்பட்டிருக்கிறது.

விவசாயக் காலநிலை நோக்கில் இவ்விரண்டாவது விளக்கமே அதிக பயனுள்ளது. ஏனெனில் நீண்ட ஒரு வரட்சிக் காலம் உள்ளதோ, இல்லையோ என்பது பயிர்ச் செய்கையைப் பாதிக்கும் மிக முக்கியமான காலநிலைக் காரணியாகும். இவ்வகையில் நோக்குகையில் மட்டக்களப்பு மார்ச் முதல் செப்டம்பர் வரையிலான ஏழு மாதங்களுக்குத் தொடர்ந்து இத்தகைய வரட்சியை நான்கு அங்குலத்திற்கு குறைவான மழைவீழ்ச்சியைப் பெறுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சராசரியாக ஆண்டொன்றிற்கு 68.3 அங்குல மழை விழ்கிறது. அதில் 78.0 சதவீத மான மழை அக்டோபரில் இருந்து பெப்ரவரிக்கு இடைப்பட்ட காலப் பகுதியிற் பெய்கிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கு கிரமமாய் நிகழ்வதும் இல்லை. ஆண்டுக்கு ஆண்டு வேறுபடுவதுடன், மாதங்களுக்கிடையேயும் வேறுபாடுகள் ஏற்படும். 1951ம் ஆண்டு முதல் 1980 ஆண்டு வரையிலான 30 ஆண்டுகளுக்கான தரவுகளை எடுத்து நோக்கின் 1963ம் ஆண்டில் 114 அங்குல அதி உயர்ந்த மழை வீழ்ச்சியும், 1968ம் ஆண்டில் 34 அங்குல மிகக் குறைந்த மழை வீழ்ச்சியும் காணப்பட்டன.

உலர் வலயத்தில் நீர்ப்பாசனம் இல்லாத போது பெரும் போகப் பயிர்ச் செய்கை வெற்றிடைய வேண்டுமானால் அக்டோபர் முதல் மார்ச் வரையில் 48 அங்குல மழை வீழ்ச்சி வேண்டும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சராசரியாக இக்காலப்பகுதியில் பெய்யும் மழை இதற்கு அதிகமாக 52 அங்குலம் வரை இருந்தபோதிலும், உண்மையில் ஆண்டுகளுக்கிடையேயும், மாதங்களுக்கிடையேயும் மிகுந்த வேறுபாடும் கிரமமின்மையும் காணப்படுவதால் நெற் செய்கை பாதிக்கப்படுகிறது. உதாரணமாக 1957/58, 59/60, 69/70 ஆகிய ஆண்டுகளில் 78 அங்குலத்திற்கு மேற்பட்ட மழைவீழ்ச்சி பெரும்போக காலப்பகுதியில் நிகழ்ந்ததால் பயிர்கள் வெள்ளத்தால் சேதமடைந்தன. வேறு சில ஆண்டுகளில் மழைவீழ்ச்சி இம்மாதங்களில் 24 அங்குலத்திற்கும் குறைந்து காணப்பட்டதால் வரட்சியால் பயிர்கள் பாதிக்கப்பட்டன. இதே போல சில ஆண்டுகளில் சில மாதங்களிலேயே பெரும் மழை பெய்வதும் பயிர் அழிவிற்குக் காரணமாகிறது. உதரணமாக 1969/70, 83/84 ஆகிய ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் சராசரி 39 அங்குல மழை பெய்ததால் அழிவு ஏற்பட்டது.

மேற்கூறியவற்றிலிருந்து மட்டக்களப்பில் மானாவாரி நெற்செய்கை மிகவும் நம்பிக்கையற்ற காலநிலைகளிற் தங்கியிருக்கிறதென்பது புலப்படும். கடந்த 20 ஆண்டுகளின் பெரும்போகச் செய்கையை நோக்கின் 9 ஆண்டுகளில் 10% நெற்பரப்பும், அதில் 4 வருடங்களில் 25% நெற்பரப்பும் அறுவடை செய்ய முடியாது அழிவுக்குள்ளாயின. ஆனால், காலநிலையால் ஏற்படும் பாதிப்பினை ஒரு சில பகுதியே ஆகும். இவற்றைவிட அளவாற்கூடிய தாக்கம்

விளைவுக்குறைச்சலால் ஏற்படுவதாகும். அறுவடை கைவிடப்படுகையில் எமது கண்ணுக்குப் புலப்படுவதுபோல இது இலகுவிற் தோன்றவில்லையெனினும் காலநிலையால் ஏற்படும் விளைவுக்குறைச்சல் பரவலானதாகையால் உண்மையில் பாரதூரமானதாகும். மட்டக்களப்பு மாவட்டத்திற் பெரும்போக ஏக்கர் விளைச்சலை ஏனைய உலர்வலய மாதங்களுடன் ஒப்பிட்டு நோக்கின் இது தெளிவாகும் (அட்டவணை 2)

அட்டவணை: 2
சில உலர் வலய மாவட்டங்களின்
நெல் விளைச்சல் - 1982/83 பெரும்போகம்
(ஏக்கர் ஒன்றுக்கு)

	மாவட்டங்கள்	ஏக்கருக்குரிய விளைவு (புசல்)
1.	மன்னார்	84.3
2.	அனுராதபுரம்	77.6
3.	பொலன்னறுவை	102.4
4.	திருகோணமலை	53.0
5.	மட்டக்களப்பு	62.5
6.	அம்பாறை	84.2
7.	அம்பாந்தோட்டை	83.0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால நிலையால் பயிர்ச்செய்கை பாதிக்கப்படுகிறபோது வேறு சில பாராதூரமான தாக்கங்களும் ஏற்படுகின்றன. விலையுர்ந்த உள்ளீடுகளை வயலிலிடுவதற்கான மனத் துணிவு விவசாயிக்கில்லாது போகிறது. இது இந்த மாவட்டத்தில் விளைச்சல் குறைவாய் இருப்பதற்கு ஒரு முக்கியமான காரணமாகிறது. விவசாயியின் நம்பிக்கைக் குறைவை நியாயமற்றதெனக் கூறுவதும் இயலாது. அத்துடன் சில ஆண்டுகளில் வெள்ளத்தாலும், வரட்சியாலும் அடுத்தடுத்துப் பயிரழிவு ஏற்படுகிறபோது சிறு விவசாயிகளும் அழிந்து போகும் நிலை ஏற்படுகிறது. இவ்வாறு காலநிலையின் தாக்கத்தினால் மட்டான விளைச்சல், உபரியான வருமானமின்மை, சேமிப்பு வாய்ப்பின்மை என்பனவும் அடுத்தடுத்து வரும் பயிரழிவுகளும் காரணமாக சிறு காணி விவசாயிகள் கடனாளிகளாவதுடன் காணிகளை மீள முடியாமலும் போகிறது. இந்த மாவட்டத்தில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் அதிகமான பெருநிலக் கிழவோர் காணப்படுவதற்கு இது விளக்கமாகலாம்.

பெரும் போகத்திற்கு வெளியேயுள்ள மாதங்கள் முன்னர் கூறியது போல, தொடர்ந்த வரட்சிக் காலமாதலால் நெற்செய்கை இந்த மாவட்டத்தில் நீர்ப்பாசனமின்றிச் சாத்தியமில்லை. சிறு போகத்திற்கு மட்டுமன்றி, பெரும்போகத்திற்கும் ஒழுங்கான மழை போதியதாக இல்லாதபடியால் நீர்ப்பாசனம் என்பது மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. ஆகவே இனி இம்மாவட்டத்தில் நெற்செய்கைக்கு உள்ள நீர்ப்பாசன வசதிகளை இங்கு நோக்கலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 70 சதவீதம் நெற்செய்கை பூரணமாக மழையை நம்பியதாகும். மற்ற 30 சதவீதம் எவ்வகையான நீர்ப்பாசனத்தையாவது பெறுவது. ஏனைய உலர் வலய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் நீர்ப்பாசனம் பெறும் நெற்பரப்பின் வீதம் இங்கு மிகக் குறைவாகும். (அட்டவணை 3) கடந்த 25 ஆண்டுகளையேனும் நோக்கும்போது ஏறக்குறைய எல்லா உலர் வலய மாவட்டங்களிலும்

அட்டவணை: 3

சில உலர்வலய மாவட்டங்களின் நெல் பயிரிடப்பட்ட பரப்பளவு-1979/80 பெரும்போகம் (வீதம்)

மாவட்டங்கள்	நீர்ப்பாசனம்	மானாவாரி
அம்பாறை	77.8	22.2
அனுராதபுரம்	93.7	6.3
மட்டக்களப்பு	30.3	69.7
மன்னார்	93.3	6.7
பொலன்னறுவை	93.6	6.4

அதிக நிலம் நெற்செய்கையில் ஈடுபடுத்தப்பட்டு இருக்கிறது. மட்டக்களப்பிலும் கடந்த 25 ஆண்டுகளில் நெற்செய்கை நிலம் முன்பிருந்ததைவிட 70% அதிகரித்துள்ளது. ஆனால் நீர்ப்பாசன வசதியுடன் கூடிய நெற்செய்கை நிலத்தை நோக்கின் மட்டக்களப்பில் இவ்வகையில் 10% நிலமே அதிகரித்துள்ளது. (அட்டவணை 4)

அட்டவணை:4

சில உலர்வலய மாவட்டங்களில் நெற்செய்கைக்கு உட்படுத்தப்பட்ட மொத்தப் பரப்பினதும், நீர்ப்பாசனப் பரப்பினதும் அதிகரிப்பு வீதம்

(1961/62 – 79/80 பெரும் போகம்)

மாவட்டங்கள்	நீர்ப்பாசனம்	மொத்தப் பரப்பு
அம்பாறை	97.9	56.3
அனுராதபுரம்	112.5	123.5
மட்டக்களப்பு	10.7	70.7
மன்னார்	46.6	41.5
பொலன்னறுவை	92.2	65.2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய மாவட்டங்களுடன் நோக்குகையில் இது மிகவும் குறைவாகும். நீர்ப்பாசன வசதியுள்ள நிலம் குறைவாகையால் இம்மாவட்டத்தில் 23% நிலத்திலேயே இரண்டுபோக நெற்செய்கை சாத்தியமாகிறது. அனுராதபுர மாவட்டத்தில் 44% நிலமும், பொலனறுவை மாவட்டத்தில் 62% நிலமும் அருகேயுள்ள அம்பாறை மாவட்டத்தில் 71% நிலமும் இரு போக நெற்செய்கைக்கு உள்ளாக்கப்படுகின்றன. பெரும் பகுதி விவசாயிகள் ஒரு போகம் மட்டுமே நெல்செய்கை பண்ண முடிகிறது என்பதையும், அவர்களது பெரும்போக விளைச்சல் குறைவானது என்பதையும் சேர்த்து நோக்குகையில் அவர்களது சீவனம் காலநிலையினால் எவ்வளவு தீவிரமாக தாக்கப்படுகிறது என்பது தெளிவாகும்.

இம்மாவட்டத்தில் 1983/84 பெரும் போகத்தில் 42,000 ஏக்கர் நிலம் நீர்ப்பாசனம் பெற்றது. இதில் 38,700 ஏக்கர் நிலம் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் இருந்தும், ஏனைய 3300 ஏக்கர் சிறு நீர்ப்பாசனத் திட்டங்களிலிருந்தும் பாசனம் பெற்றன 17 பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இம் மாவட்டத்திலுள்ளன. இவற்றுள் 4 மட்டுமே இரு போகங்களும் நீர் வழங்க வல்லவை எனலாம். இப்பாரிய திட்டங்கள் நீர் வழங்கும் நெற்பரப்பு பின்வருமாறு:

1. கல்லோயா இடது கரையும் நவகிரிக்குளமும்	9,600 ஏக்கர்
2. வாகனேரி	9,140 ஏக்கர்
3. உறுகாமம்	7,790 ஏக்கர்
4. உன்னிச்சை	7,370 ஏக்கர்
மொத்தம்	33,900 ஏக்கர்

இத்திட்டங்கள் உலர்வலயத்தில் உற்பத்தியாகும் நதிகளில் இருந்தே நீர் பெறுவனவாதலாலும், இவற்றின் நீரேந்தும் பிரதேசங்கள் குறைந்த பரப்பை உடையனவேயாதலாலும் இவற்றின் நீர்ப்பாசனத் திறன் குறைந்தேயாகும். இந்நான்கு திட்டங்களும் சேர்ந்து மொத்தம் 18,500 ஏக்கருக்கு சிறுபோகத்தில் நீர் வழங்க ஒழுங்குள்ளது.

கல்லோயா இடது கரை வாய்க்காலும் நவகிரிக்குளமும் சேர்ந்து சிறுபோகச் செய்கைக்கு 4,500 ஏக்கர் நிலத்திற்கு நீர் வழங்குகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் நீர் வழங்கும் பெரிய நீர்ப்பாசனத் திட்டமாக இது இருந்த போதிலும் இம் மாவட்டத்தில் 9 500 ஏக்கர் நிலமே இதன் கீழ் வருகிறது. அதிலும் உண்மையில் மூன்றில் ஒரு பகுதிக்கே ஒவ்வோர் ஆண்டும் நீர் கிடைக்கிறது. ஏனைய நிலங்களுக்கு நீர் கிடைப்பது இல்லை. அல்லது அருமை எனலாம். பொதுவில் விளைச்சல் புள்ளி விபரங்களைப் பார்க்கும்போது கல்லோயாத் திட்டத்தின் கீழ் வரும் மட்டக்களப்பு மாவட்ட நிலங்களில் விளைச்சல் மானவாரி நிலங்களினதும் விளைச்சலிலும் அதிகமாயில்லை. இந்நிலங்கள் பெயரளவில் கல்லோயதிட்டத்தின் கீழ் வரினும், வால்பகுதியில் இருப்பதால் உண்மையில் ஒழுங்காய் பாசன நீர் பெறுமையே காரணமெனல் வேண்டும்.

ஆயினும், கல்லோயாத் திட்டத்தின் ஆரம்பதில் திட்டமிடப்பட்டதிலும் பார்க்க மிகப்பெரியளவு இரண்டுமடங்கு நிலம் திட்டத்தின் எல்லாப்பகுதிகளிலும் செய்கைக் குட்படுத்தப்பட்டிருப்பதால், இன்று கல்லோயாவின் வால்பகுதியை அடையும் நீர் மிகக்குறைவானதேயாகும். இதனால் மட்டக்களப்பு மாவட்ட கல்லோயா நீர்ப்பாசன நிலங்கள் திட்டத்தின் ஆரம்ப ஆண்டுகளில் இரு போகங்களுக்கும் போதிய நீர் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும் இந்நாட்களில் மிகக் குறைவாகவே பெறுகின்றன. 1980ம் ஆண்டிலிருந்து கல்லோயா வாய்க்கால்களைப் புனரமைக்கும் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. வாய்க்கால்கள். சிதைந்து, தூர்ந்தும் இருந்ததினுலேயே வால்பகுதி நிலங்களுக்கு நீர் கிடைக்கவில்லையெனவும், இனி நீர் கிடைக்கும் எனவும் சில நம்பிக்கை தெரிவித்தனர். கடந்த மூன்ருண்டுகள் போதிய மழை பெய்து சேனநாயக்கா சமுத்திரம் முன்பொருபோதுமில்லாதவாறு நிரம்பியதால் இன்னும் சிலகாலம் பார்த்தே இந் நம்பிக்கையின் செம்மையை மதிப்படுதல் கூடும்.

முடிவுரை

மட்டக்களப்பில் நெற்செய்கை மிகவும் பெரியதாகும். பாரிய நிலப்பரப்பும், பெருந்தொகையான மக்களும் இதில் ஈடுபட்டுள்ள போதும் நெற்செய்கையினுல் பெறக்கூடிய வருமானம். மிகக் குறைவானது. பெருந்தொகையான நிலத்தை செய்கை பண்ணும் ஒரு சிலரைத் தவிர ஏனைய சிறு காணிச் சொந்தக்காரர்கள் மிகவும் குறைந்த வாழ்க்கைத் தரத்தையே எட்ட முடிகின்றது. இதற்குக் காரணம் மட்டக்களப்பின் காலநிலை அமைப்பே. மிகவும் ஒழுங்கு குறைந்த மழைவீழ்ச்சியை நம்பியே 70 வீதத்திற்கு மேற்பட்ட விவசாயம் நடைபெறுகின்றது. இந்நிலையில் விளைச்சல் மிகவும் குறைவாய் இருப்பதை தவிர்க்க முடியாது, கடந்த 30 ஆண்டுகளில் அருகேயுள்ள அம்பாறை மாவட்டத்தில் ஏக்கர் ஒன்றிற்கான விளைச்சல் 33% அதிகரித்துள்ளது. அதே காலப்பகுதியில் மட்டக்களப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு 5% மட்டுமேயாகும்.

கடந்த 30 ஆண்டுகளில் விவசாயத்துறையில் புரட்சிகரமான பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. புதிய உயர் விளைச்சல் விதை இனங்கள், உரவகைகள், பூச்சிகொல்லிகள், பண்பாட்டு முறைகள், உபகரணங்கள் என்பனவற்றின் பிரயோகம் பரவலாக உலகெங்கிலும் அதிக விளைச்சலைக் கொணர்ந்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் நெற்செய்கை இவ்வாறு திருந்தாதிருப்பதற்குக் காரணம் மேற்கூறிய காலநிலைப் பிரச்சினையேயாகும். ஆனுல், ஏனைய உலர்வலய மாவட்டங்களில் நீர்ப்பான வசதிகளும் அவற்றில் ஏற்படும் முன்னேற்றங்களும் கால நிலையால் வரும் நீர்ப்பற்ருக்குறையை பெருமளவிற்கு ஈடுசெய்கின்றன. உதாரணமாக இன்னெரு உலர் வலய மாவட்டமான பொலனறுவை 90% நிலப்பாசனம் பெறுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் 70% நிலப்பரப்பு நீர்ப்பாசனம் பெறுகின்றது. மட்டக்களப்பில் நீர்ப்பாசனங்கள் 30% மட்டுமே. அவையும் போதிய நீர்ப்பாசனம் பெறுவதில்லை. கடந்த 25 ஆண்டுகளில் இம்மாவட்டத்தில் நீர்ப்பாசன அளவில் ஏற்பட்ட அபிவிருத்தி தேசிய அளவில் மிகக் குறைவானதே என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திற்கு இதுவரை நீர் வழங்கிய மிகப்பாரிய திட்டமாகிய கல்லோயாத் திட்டத்தைப் பொறுத்தவரை மட்டக்களப்பு நிலங்கள் அத்திட்டத்தின் வால் முனையில் அமைந்திருப்பதால் மிகக் குறைந்தளவு பலனையே பெறுகின்றன. மாதுறுஓயாத் திட்டத்திலும் மட்டக்களப்பு நிலங்கள் வால்முனையிலேயே அமையும்.

எமது அடுத்த இதழுக்கான
மையப் பொருள்:

"கமக்காரர் தாபனங்கள்"

★ நிறைய விஷயங்கள்
★ நிறைய கட்டுரைகள்

எதிர்பாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அதிபர்களுக்கு......

எமது நிறுவகம் வெளியிடும் 'கமநலம்' சஞ்சிகை கடந்த சில ஆண்டுகளாக உங்கள் பாடசாலையை வந்தடைந்திருக்கும் என நம்புகிறோம். இச்சஞ்சிகையை வாசித்து உங்களுடன் பணிபுரியும் ஆசிரியர்களும், மற்றும் மாணவர்களும் நன்மையைப் பெற்றிருப்பார்கள் என்ற நம்பிக்கையும் எமக்குண்டு.

நமது நாட்டில் கமத்தொழில் சம்பந்தமான சஞ்சிகையொன்று தொடர்ந்து காலத்திற்குக்காலம் வருவதென்றால் மிகவும் கஷ்டமான காரியம் என்பதை நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. பல அரசாங்க தாபனங்கள் இதுவரை பலதரப்பட்ட சஞ்சிகைகளை வெளியிட்டபோதிலும் அவற்றில் பெரும்பாலானவை சுவடு தெரியாமல் போய்விட்டன. நாம் கடந்த 13 ஆண்டுகளாக எம்மை எதிர்நோக்கிய பல பிரச்சினைகளுக்கு மத்தியிலும் 'கமநலம்' சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றோம். 'கமநலத்தை' வெளியிடுவதில் அதிக செலவினத்தை எதிர்நோக்குகின்றபோதிலும் வாசகர்களின் நன்மையைக் கருதி குறைந்த விலையிலேயே விற்பனை செய்கின்றோம்.

உங்களை வந்தடைந்த 'கமநலத்தை' மாணவர்களும், ஆசிரியர்களும் வாசித்துள்ள போதிலும் அவர்களால் முழுப்பயனையும் பெற்றிருக்க முடியாது என நம்புகின்றோம். உங்கள் பாடசாலை நூலகத்தில் இருந்து கமநலத்தை பெற்று வாசிக்கும் கொஞ்ச நஞ்ச நேரத்தில் ஓரளவு விஷயதானங்களைத்தான் அவர்களால் கிரகிக்க முடியும். அதாவது, 'கமநலத்தில்' வெளிவரும் விஷயதானங்களை மேலெழுந்த வாரியாகத்தான் அவர்களால் வாசிக்கமுடிகின்றது.

இதே நிலை நிலவியதினாலோ என்னவோ நமது நாட்டில் உள்ள சில பாடசாலை மாணவர்கள் 'கமநலத்தை' நேரடியாகப் பெறுவதற்கு எம்முடன் ஒழுங்குகளைச் செய்துள்ளார்கள். எனவே, உங்கள் பாடசாலையில் உள்ள மாணவர்களும் இதே நிலையில் இருக்கலாம் என்பது எமது எண்ணம். அதாவது அவர்களும் தபால்மூலம் 'கமநலம்' இதழை நேரடியாகப் பெற விரும்புவார்கள்.

ஆதலால், அதிபர் என்ற முறையில் நீங்கள் எங்களுக்கு ஆற்றவேண்டிய பேருதவி என்னவெனில், 'கமநலம்' பிரதியை நேரில் பெற விரும்பும் மாணவர்களைக் 'கமநலம்' சந்தாதாரராக்கும் கைங்கரியமாகும். இதன்பொருட்டு நீங்கள் அவர்களிடமிருந்து ஆண்டுச் சந்தா பணத்தைப் பெற்று அவர்களது பெயர், விலாசம போன்ற விவரங்களுடன் எமக்கு அனுப்புமாறு விநயமாக உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் பாடசாலை மாணவர்கள் பலரும் 'கமநலம்' சந்தாதாரராவதற்கு விரும்புவார்கள். உதாரணமாக, சுமார் அறுபது பேர் 'கமநலம்' சந்தாதாரராவதற்கு விரும்பினால் எமக்கு அறுநூறு ரூபாவுக்கு காசுக்கட்டளையை அல்லது காசோலையை அனுப்பவும். அவர்களது பெயர், விலாசத்தை கடதாசியில் எழுதி இணைக்கவும்.

'கமநலம்' தனிப்பிரதி மூன்று ரூபாவாகும். வருடமொன்றுக்கு பங்குனி, ஆனி, புரட்டாதி, மார்கழி ஆகிய மாதங்களில் நான்கு இதழ்கள் வெளியிடப்படும். நான்கு இதழ்களின் பெறுமதி 12 ரூபாவாக இருக்கின்றபோதிலும் ஆண்டுச்சந்தா 10 ரூபாவே, தபாற் செலவையும் நாமே ஏற்றுக்கொள்கிறோம்.

இதனை முடிக்கு முன் —

'கமநலம்' தமிழ்பேசும் மக்கள் நலனுக்காக மலரும் ஒரு சஞ்சிகை. இதை வளர்ப்பது தமிழ்பேசும் மக்களின் கடமையாகும். எனவே, நீங்களும் ஒரு தமிழ்ச் சஞ்சிகையின் வளர்ச்சியில் பங்கு எடுப்பீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

— **ஆசிரியர்கள்**

'கமநலம்' சந்தாதாரருக்கு

'கமநலம்' சஞ்சிகைக்கு இதுவரையும் சந்தாதாரராக இருந்து எமது ஆக்கபூர்வமான பணிக்கு உறுதுணை புரிந்தீர்கள். இதற்கு உங்களுக்கு நன்றி கூறுகிறோம். இந்த இதழுடன் உங்கள் சந்தா தொகை முடிவடைந்துவிட்டது. எனினும், அடுத்த ஆண்டு தொடர்ந்தும் 'கமநலம்' சந்தாதாரராக இருப்பீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

1987ம் ஆண்டுக்கான சந்தா தொகை 10 ரூபாவாகும், 'கமநலத்தை' வெளியிடுவதில் அதிக செலவினத்தை நாம் எதிர்நோக்குகின்ற போதிலும் எமது வாசகர்களின் நன்மையைக் கருதி விலையில் எவ்வித மாற்றத்தையும் மேற்கொள்ளவில்லை. எனவே, இம்முறையும் 10 ரூபாவை அனுப்பி சந்தாதாரர் ஆகுங்கள் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இதுவரையும் உங்களை வந்தடைந்த 'கமநலம்' சஞ்சிகைகளினால் உங்களுக்குக் கிடைத்த பயன்களை உங்கள் நண்பர்களும், உறவினர்களும் பெற வேண்டும் என்பதே எமது பேரவா. ஆகவே, அவர்களையும் 'கமநலம்' சந்தாதாரராக்கும் கைங்கரியத்தை உங்களிடமே விட்டுவிடுகின்றோம். இக்கைங்கரியத்தை நிறைவேற்றுவது உங்கள் முயற்சியிலும், ஊக்கத்திலுமே தங்கியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இங்கு நாம் உங்களுக்காக 'கமநலம்' சந்தா படிவத்தை வெளியிட்டுள்ளோம். உங்கள் நண்பர்களுக்கு அல்லது உறவினர்களுக்கு சந்தாப் படிவம் தேவை என்றால் எங்களுக்கு எழுதுங்கள் அல்லது இதே மாதிரியான படிவத்தை தயாரித்து அதைப் பூர்த்தி செய்து அனுப்புமாறு கூறுங்கள்,

உங்கள் ஊக்கமும், உதவியும், உறுதுணையும் எங்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. 'கமநலம்' தொடர்ந்தும் தரமான கட்டுரைகளைத் தாங்கி வரும் என உறுதிமொழி அளிக்கிறோம்.

கீழேயுள்ள படிவத்தை நிரப்பி மேற்படி முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

– – – – – – – – – இங்கே கிழிக்கவும் – – – – – – – – –

'கமநலம்' சஞ்சிகையின் ஒரு வருடச் சந்தாவாக 10 ரூபாவுக்கான காசுக் கட்டளையை / அஞ்சற்கட்டளையை இத்துடன் அனுப்புகிறேன்.

பெயர்:...

முகவரி:...

....

– – – – – – – – – – – – – – – – – –

அனுப்ப வேண்டிய முகவரி :-

DIRECTOR,
AGRARIAN RESEARCH & TRAINING INSTITUTE,
114, WIJERAMA MAWATHA,
COLOMBO-7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவரும் உழவுத் தொழிலும்

உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்று
தொழுவாரை யெல்லாம் பொறுத்து.

உழுதலை செய்யமாட்டாது பிற தொழில்கள் மேல் செல்வார் யாவரையும் தாங்குதலால் உழு தொழிலாளர் உலகத்தாராகிய தேருக்கு அச்சாணியாவர்.

சுழன்று மேர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

உழவினால் வரும் மெய் வருத்தம் நோக்கிப் பிற தொழில்களைச் செய்து திரியினும் முடிவில் உழவு தொழில் வழியதாம் உலகம். ஆதலால் மெய்வருத்தம் தரினும் தலையாய தொழில் உழவுத் தொழிலேயாம்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்.

யாவரும் உண்ணும் வகை உழுதலைச் செய்து அதனால் தாமும் உண்டு வாழ்கின்றவரே உலகிற்காக வாழ்பவராவர், மற்றையரெல்லாம் பிறரைத் தொழுது அதனால் தாம் உண்டு அவர் பின் செல்பவர் ஆவர்.

பல்குடை நிழலும் தம்குடைக் கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்.

கலப்பையினால் வரும் செல்வத்தைத் தமக்கு நிழலாகக் கொண்ட அரசர்; பல மன்னர் ஆளும் நிலம் முழுவதும் தம் அரசரின் ஆணையின் கண் காண்பார்.

இரவார் இரப்பார்கொள் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

தம் கையினால் உழுது உண்டலை இயல்பாக உடையவர் பிறரை இரவார்; தம்மை இரப்பார்க்கு அவர் வேண்டிய ஒன்றை ஒளிக்காமல் கொடுப்பவர்.

உழவினார் கைமடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

உழவரது கை அதனைச் செய்யாது இருக்குமாயின்; யாதொரு பொருளின் கண்ணும் விரும்புதலையும் விட்டேம் என்னும் துறவியர்க்கும் அத்துறவு நெறிக்கண் நிற்றல் இல்லையாகும்.

தொடிப்புழுதி கஃசா உணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப்படும்.

ஒரு நிலத்தினை உழுதவன் ஒரு பலப் புழுதியை கஃசாகக் காயவிடுவானாயின்; அதன் கண் செய்த பயிருக்கு ஒரு பிடி எருவும் இட வேண்டாமல், செழித்து வளர்ந்து விளையும்.

ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

பயிருக்கு உழுதலிலும் எரு இடுதல் நன்று; களைகட்டல் செய்தபின் அப்பயிரினைக் காத்தல் அப்பயிருக்கு நீர்விடுதலிலும் நன்று.

செல்லாள் கிழவன் இருப்பின் நிலம்புலந்
தில்லாளின் ஊடி விடும்.

நிலத்திற்கு உரியவன் நாடோறும் அங்கு சென்று பார்த்து ஆவன செய்யாமற் சோம்பி இருப்பான் ஆயின்; அஃது அவன் இல்லாள் போலத் தன்னுள்ளே வெறுத்துப் பின் அவனோடு ஊடிவிடும்:

இலமென் றசை இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.

யாம் வறியோம் என்று சொல்லிச் சோம்பி இருப்பாரைக் கண்டால்; நிலம் என்று சொல்லப்பெறுகின்ற பெண் தனக்குள் சிரிப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Agrarian Research and Training Institute

FOOD COMMODITIES BULLETIN

The Institute issues a weekly Food Commodities Bulletin every Friday containing price and supply information (Wholesale and Retail) of food commodities in the Colombo city and suburbs Similar information from 12 cities will be included in the Bulletin shortly.

Subscription rates are as follows:

One year	Rs.	250/-	(52 Issues)
Six months	Rs.	125/-	(26 Issues)
Three months	Rs.	65/-	(13 Issues)
Single Copy	Rs.	5/-	

Those who wish to obtain copies send the subscriptions to :—

The Director,
Agrarian Research & Training Institute,
P. O. Box 1522,
Colombo.

PRINTED AT THE KUMARAN PRESS, 201, DAM STREET, COLOMBO-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org